www.tamilarangam.net

# பூவரசு

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று.
கார்த்திகை– மார்கழி1991.

# Poovarasu



„Tenever International" mit Tamilen

உள்ளே: பிறேமனில் தமிழர் கலாச்சார தின விழா

வெளி நாட்டவர்கள் வெறுக்கப்படுகிறார்கள்?–செய்திக்கட்டுரை

இவற்றோடு பல்சுவை அம்சங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்பு வாசக நெஞ்சங்களுக்கு!

இது நாள்வரையில் கையெழுத்துப்பிரதியாக
வெளிவந்த உங்கள் பூவரசு
இந்த இதழிலிருந்து தமிழ் அச்சு எழுத்துக்களில்
வெளிவருகிறது.
இது உங்களுக்கு மகிழ்ச்சியைத்தரும் மாற்றமே.
இந்த மாற்றத்தொடு
புதிய தமிழ் எழுத்து மாற்றமும் பூவரசில்
இடம்பிடித்துள்ளது.
எழுத்துக்களில்
எழுத்து வடிவங்களில்
மாற்றம் பெற்று
உங்களுக்கு மகிழ்ச்சியைத்தருகின்ற பூவரசு
மலரும் புதிய ஆண்டிலிருந்து
இன்னும் பல புதிய அம்சங்களைச்சுமந்துவரும்.
பூவரசு என்கின்ற இந்த இனிய தமிழ் ஏடு
மேலும் வளர்ச்சியுறுவதென்பது
உங்கள் காங்களில்தான் தங்கியிருக்கிறது.
உங்கள் ஆதரவிலேயே
பூவரசு தன் கலை இலக்கியப் பணியில்
தொடர்ந்து முன்னேறமுடியும்.
உங்கள் அன்பும் ஆதரவும் என்றும் வேண்டும்.
நமது சந்திப்புகள்
தொடரும்.

அன்புடன்

சின்னையா மகேஸ்வரன்.
(பூவரசு ஆசிரியர் குழு சார்பில்

www.tamilarangam.net

# பூவரசு

POOVARASU.

உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்.

பூவரசு
இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று

இதழ்:
6

கார்த்திகை– மார்கழி1991

படைப்பவர் ஆக்கம் தருக
படிப்பவர் ஊக்கம் தருக.

பூவரசு பற்றிய சகல தொடர்புகளுக்கும்:
Sinniah Maheswaran
Neuwieder Str–32
2800 Bremen–41
Germany.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாவமும் ராகமும் தாளமும் என்று
பரதமாய்ப் புவிதனில் மலர்ந்தது அன்று
தமிழர்தம் கலைகளில் பரதமும் ஒன்று
பரதமே கலைகளில் சிறந்தது இன்று



ஹேர்ன—சலங்கை ஒலி நாட்டியக் கலாமன்ற
நடன ஆசிரியை திருமதி: **சாவித்திரி இமானுவேல்**
அவர்களின் மாணவி,
செல்வி

## *ஜனனி அன்னராசா*

அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம்
டோட்முண்ட் நகரில்,
21.09.1991 சனிக்கிழமை நடைபெற்றது.
நடனக் கலையுலகில் பாதம்பதிக்கும்
கலைச்செல்வி **ஜனனி** யால்
பரதக்கலையுலகம் பெருமையுறவேண்டுமென்று
பூவரசு வாழ்த்துகிறது.

*பாரதத்தின் அரங்கினில்வருகின்ற ஜனனி*
*பாரினில் கலைமகள் இவளென வளர் நீ!*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொன்னுக்கிழவி.

(சிறுகதை)

அந்தச்சுற்று வட்டாரத்திலேயே பொன்னுக்கிழவி மேல் பாசமும் மரியாதையும் வைக்காதவர்களே இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.
பொன்னுக்கிழவியும் அப்படித்தான்.
ஊர்ப்பெண்கள்மத்தியில் தன்னையறியாமலேயே தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவள்.குமரிகளிடம் அம்மா போலவும் இளவயதுப் பெண்களிடம் அக்காபோலவும் அவளது சொல்லுக்கு எப்போதுமே மரியாதை உண்டு.
அவளும் ஊர்விடுப்புகளில் அநியாயமாகத் தலைபோடமாட்டாள்.ஆனால் அவளது வாதம் எப்போதுமே நடு நிலையாகத்தான் இருக்கும் என்பது எல்லோருடைய கருத்தும்.
பொன்னுக்கிழவி தன் சொல்லுக்கு இருக்கும் மதிப்பைக் காப்பாற்றத்தெரிந்தவள்.
பொதுவாகவே நல்லவள்.
அது வீடு என்று சொல்லுமளவு பெரிய இடமல்ல.இரண்டறை அச்சறக்கை என்றுதான் சொல்ல வேண்டும்.
பின்னாலே ஓர் ஓலைக்கொட்டிற் குசினி.
புருசன் முத்தையா தானே சம்பாதித்து தன் கையால் கட்டிக் கொடுத்துவிட்டுச் செத்துப்போய்விட்டார்.



"சஞ்சீவி"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாசலால் நுழைந்தவுடன் வருகின்ற அறை அல்லது கூடம் என்று சொல்லக் கூடிய ஒன்றில் ஒரு வாங்குக் கட்டிலில் பொன்னுக்கிழவி படுத்துக்கிடந்தாள். தூக்கமா அல்லது விழிப்பா என்று சொல்லமுடியாத ஓர் இரண்டும் கெட்டான் நிலை.கண்கள் களைத்துப்போய் அரைகுறைப்பார்வையில் கிடப்பது தெரிகிறது.

அறைக்குள் வெளிச்சம் இல்லை.

கட்டிலுக்குப் பக்கத்தில் தோட்டக்காரரின் மனைவி சரசு கோப்பி ஆற்றிக் கொண்டிருக்கிறாள்.அவளுக்குப்பொன்னுக்கிழவியின் மன நிலை நன்றாகப்புரியும். சரசுவுக்கு ஒன்பது பிள்ளைகள்..ஆனால் அந்த ஒன்பதுமே அவளுக்கு நவரத் தினங்கள்தான்.புத்திரபாசம் என்றால் என்னவென்பதை நன்றாகவே அறிந்தவள்.

''அணை பொன்னாச்சி இதைக்குடியணை ''

கோப்பித்தண்ணியை வேண்டாவெறுப்பாகக் கையில் வாங்கியபடி பொன்னுக்கிழவி புலம்பிக்கொண்டிருந்தாள்.

கிழவிக்கு வயது எழுபத்தைந்துக்கு மேல் இருக்கவேண்டும்.வாழ்க்கையின் கடைசிப் படிகளில் இருக்கையில்தான் அவளுக்கு இப்படி ஒருசோகம் நேர்ந்தது.

அவள் மகன் கண்ணனைக்காணவில்லை!

பலவருடங்களுக்குமுன்பு பொன்னுக்கிழவி மிகவும் இளமையாகப் பொன்னியாக இருந்த காலத்தில் முத்தையாவுடன் இளம் தம்பதிகளாக அந்த ஊருக்கு வந்தவள்.ஊரில் ஒதுக்குப்புறமாக ஓர் கொட்டில் கட்டி இருவரும் கூலி வேலைச் சீவியம்தான்.

அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்..ஏன் இந்த ஊருக்கு வந்தார்கள்..என்பது யாருக்கும் தெரியாது.யாரும் அறியவும் முற்படவில்லை.

காலப்போக்கில் இவர்கள் நல்லவர்கள் என்று கண்டு கொண்டு ஊர் இவர்களையுப் தங்களோடு சேர்த்துக்கொண்டது.

முத்தையாவுக்கு கூலி வேலைதான் தொழில். பேராசை கிடையாது.

சம்பாதித்ததில் சேமித்தது பொன்னுக்கிழவியின் இந்த வீடுதான்.

நீண்ட காலங்களாகப் பிள்ளை ஒன்றும் பிறக்கவில்லை.

முத்தையாவிற்கு நன்றாக வயது போய்விட்டது.

ஒருநாள் ஒரு ஆறு அல்லது ஏழு வயதுச் சின்னப்பயலை வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வந்தார்.

அவனுக்கு ஊர் பேர் தெரியாது.

பொன்னுக்கிழவியுடனும் முத்தையாவுடனும் நன்றாகச்சேர்ந்துகொண்டான்.

கண்ணன் என்ற பெயர் கூட பொன்னுக்கிழவி வைத்ததுதான்.

அவனும் நல்ல பிள்ளை!

பொன்னுக்கிழவி அவனை ஊர்ப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுபோய் வாத்தியார் கையில் ஒப்படைத்துவிட்டாள். வாத்தியாருக்குக் கிழவிமேல் இருந்த மரியாதை பையன்மேல் அக்கறையாகப் போய்விட்டது.

அவன் ஒழுங்காகப் படிக்கிறானா விளையாடுகிறானா என்று கிழவிக்கு ஒன்றுமே தெரியாது..அவனும் படிப்பில் அவ்வளவு மட்டமல்ல.பள்ளிக்கூடம் முடிந்து வந்தால் கிழவி பின்னாலேயே சுற்றிச்சுற்றி உதவிகள் செய்துகொண்டிருப்பான்.

www.tamilarangam.net

கண்ணன் வந்து பத்துப் பதினொரு வருசங்கள் இருக்கும்.
அதற்கிடையில் எத்தனை மாற்றங்கள்.எத்தனை இனக்கலவரங்கள்....
உயிரிழப்புகள்.வாழ்க்கை அமைதி இழந்து போயிருந்தது.
எட்டு வருசத்துக்கு முதல் முத்தையரும் காலமாகிவிட்டார்.
பொன்னுக்கிழவிக்குத் தாளமுடியாத சோகம்.அவளுக்கு இருப்பதெல்லாம்
கண்ணன் ஒன்றுதான்..அவனும் பள்ளிக்கூடம் போவதை நிறுத்திவிட்டு
கிழவிக்கு ஒத்தாசையாக இருந்து வந்தான்.சீவியம் கஷ்டமென்றாலும்
மோசமாகவில்லை.கிழவியும் சின்ன மாக்கறித்தோட்டம் போட்டு ஊருக்குள்
வியாபாரம்..அவளுக்குக் கண்ணன் மேலிருந்த பாசம் அவனைக் கூலி வேலைக்கு
அனுப்ப அனுமதிக்கவில்லை.
ஒருகிழமையாகக் கண்ணனைக் காணவில்லை..ஆரம்பத்தில்-
விளையாட்டுப்பிள்ளை...யாராவது நண்பர்களுடன் ஊர்சுற்றப் போயிருப்பான்..
ஓரிரு நாளில் திரும்பி வந்துவிடுவான்..என்றுதான் கிழவிக்குத்
தோன்றியது. அதனால் கிழவியும் யாரிடமும் அவனைப்பற்றி விசாரிக்கவில்லை.
மூன்று நாட்கள்...நான்கு நாட்கள்...ஒருகிழமையாகிவிட்டது.
இப்போது பொன்னுக்கிழவி ஊரெல்லாம் அவனைத் தேடத் தொடங்கி விட்டாள்.
ஊரில் விசயம் முதலே தெரிந்திருந்தாலும் அதை யாரும் கிழவியிடம்
சொல்லவில்லை.
கண்ணனை மட்டுமல்ல சுற்று வட்டாரத்தில் நாலைந்து விடலைப்
பெடியன்களைக் காணவில்லை.
ஊர் ஊகித்துக்கொண்டது.கிழவிக்குச் சொல்லத்தயங்கியது.
கிழவிக்கு அரசியல் என்பது அறவே தெரியாது..அதைப்பற்றி அக்கறையும்
இல்லை.'சனம் செத்துப்போகிறதே..'என்று கேள்விப்படும்போதெல்லாம் மனதிற்குள்
வேதனை ஏற்படும்..ஆனால் அதன் அடிப்படைகளைப் புரிந்துகொள்ளும் பக்குவம்
அறிவு தனக்கு இல்லை என்றவோர் மனப்பான்மையோ அல்லது என்னால் என்ன
செய்ய முடியும் என்ற கையாலாகாத்தனதின் வெளிப்பாடோ அவள் அதைப்பற்றி
யாரிடமும் பேசியதுமில்லை. ஆனால் ஒவ்வொரு முறையும் சனம் செத்துப்போகிறதே
இது அநியாயம்.. என்ற கவலை உண்டு.
கிழவி கண்ணனைத் தேடிக்களைத்து வீட்டிற்குப் போய் அழ ஆரம்பித்து
விட்டாள். சரசுவுக்கு மனசு பொறுக்கவில்லை.இன்னும் ஓரிரண்டு பெண்டுகளையும்
கூட அழைத்துப்போய் பொன்னுக்கிழவியிடம் விசயத்தைப் பக்குவமாகச்
சொல்லிவைத்தாள்..அவ்வளவுதான்.கிழவி விம்மி விம்மி அழ ஆரம்பித்து
விட்டாள்.புலம்பவில்லை..ஆனால் ஆழமான ஏக்கம் நிறைந்த விம்மல்..அதை
நிறுத்துவது என்பது பெரும்பாடு.
தான் வளர்த்தபிள்ளை..தன் கடைசிக்காலங்களில் தன்னைக்கவனியாமல்
ஓடிப்போய்விட்டானே என்ற ஏக்கம் அவளுக்கு அறவே கிடையாது..ஆனால்
அவன்மேல் அவளுக்கிருந்த பாசம் நேசம் எல்லாம் எல்லோருக்கும் புரியாது.
அவன்கூட கிழவிமேல் வைத்திருக்கும் அன்பும் அக்கறையும் கொஞ்ச நஞ்சமல்ல.
எப்படி அந்த அன்பு திடீரென்று அறுந்து போகக்கூடும் என்பதைக்
கிழவியால் கற்பனைகூடச் செய்யமுடியவில்லை.கிழவி உடைந்து போனாள்.
நாலைந்து நாட்கள் கட்டிலோடு கிடந்தாள்.
ஊர்ச்சனத்துக்கு நம்பிக்கை தளர்ந்து விட்டது.
கிழவிக்கு வயதும் நன்றாகப்போய்விட்டது.தாங்கமுடியாத சோகம் வேறு.
எவ்வளவு நாள் தாக்குப்பிடிப்பாளோ தெரியவில்லை...என்ற ஏக்கம்

www.tamilarangam.net

எல்லோரிடமும் இருந்தது..ஆனால்–
ஆறு மாதங்களில் ஒரு வருடத்தில் கண்ணன் திரும்பி வந்து விடுவான்.'
என்று ஏதோ சொல்லிக் கிழவியைத் தேற்ற முனைந்து கொண்டிருந்தார்கள்.

—

ஆறு மாதங்களாகி ஒரு வருடமும் ஆகிவிட்டது.
கண்ணன் வரவில்லை..ஆனால் பொன்னுக்கிழவி பிழைத்துக்கொண்டுவிட்டாள்.
பழைய சுறுசுறுப்பும் பேச்சும் குறைந்துவிட்டதுதான்.வாழ்க்கையில்
ஓர் ஒட்டுதல் இல்லாதது போலவும் வாழ்க்கை சூனியத்தை நோக்கி
நகர்வது போல இருந்தாலும் பொன்னுக்கிழவி உயிரோடு இருக்கிறாள்.
ஊர்ச்சனமும் அவளது மன நிலையைப் புரிந்துகொண்டது.
ஒருசிலர் கண்ணனைச் சில சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறார்கள்.
ஆனால் கிழவிக்கு அவர்கள் சொல்லவில்லை..அவனும் அந்த ஊர்ப்பக்கமாக
வந்ததாகத் தெரியவில்லை.

காலம் கடந்து கொண்டிருந்தது.
இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன.தொடர்ந்தும் அரசியல் சூதாட்டம்
நடந்துகொண்டிருந்தது.
இனக்கலவரங்கள்...படுகொலைகள்...பழிவாங்கல்கள்...
சனம் செத்துக்கொண்டிருந்தது.
பொன்னுக்கிழவி வேதனைப்பட்டுக்கொண்டிருந்தாள்.விடியலைப்பற்றி அவளுக்கு
அக்கறை இல்லை என்றாலும் அவளால் சனம் செத்துப் போவதைப் பொறுத்துக்
கொள்ளமுடியவில்லை.
ஆனால் அவள் அதைப்பற்றி யாரிடமும் பேசியதுகூட இல்லை.
அவளது வாதங்களும் விவாதங்களும் ஆற்றில்வேதனைகளும் எல்லாம்
அவளுக்குள்ளேயே நடந்துகொண்டிருந்தன.
திடீரென்று ஒரு நாள் கண்ணன் செத்துப்போய்விட்டதாக ஒரு தகவலைத்
தெரிந்துகொண்டு யாரோ ஊருக்குள் சொல்லிவிட்டார்கள்.
ஊர் ஸ்தம்பித்துப் போய்விட்டது.
கண்ணன் செத்துப்போனதால் அல்ல.செத்துப்போன,செத்துப்போகிற பல
இளைஞர்களில் ஒருவன்தான் அவனும்..அது ஊருக்கு நன்றாகத்தெரியும்.
ஆனால் அவன் பொன்னுக்கிழவியின் மகன் என்பதால்தான்.
இதைக் கிழவிக்குச்சொல்லாமல் மறைப்பதா?.அது நியாயமானதா?.என்று
பல கேள்விகள்.
அது நியாயமில்லைத்தான்.!
ஆனாலும் கிழவிக்கு எப்படிச்சொல்லமுடியும்..அதை அவள் எப்படி ஏற்றுக்கொள்ள
போகிறாள்?
அதைக்கேட்டவுடன் மாரில் அடித்து அழுது அந்த வேதனையில்
செத்துப்போகக்கூடுமே..என்று எல்லோர் மனதிலும் ஓர்கவலை கலந்த பயம்.
ஆனால் இதைக் கிழவியிடமிருந்து மறைப்பது யாருக்குமே சரியாகப்
படவில்லை..அது மனிதத்தன்மையும் இல்லைத்தான்.
கிழவியுடன் இதைப்பற்றிப் பேசுவதை ஊர், பெண்டுகளிடமே விட்டுவிட்டது.
அவர்கள் ஆற்றாமையால் கூடிக் குசுகுசுத்துக்கொண்டிருந்தார்கள்.
எல்லோர் மனதிலும் கண்ணனுக்காக அனுதாபமும்,கிழவிக்காகக் கவலையும்

ஏற்பட்டதே ஒழிய என்னசெய்வது என்று புரியாத சங்கடமான ஓர் நிலை.
கடைசியில் சரசுதான்,நடந்ததைக் கிழவியிடம் சொல்லிவிடத்
தீர்மானித்து வேறு இரண்டு பெண்களோடு கிழவிவீட்டை நோக்கிப்
போய்க்கொண்டிருந்தாள்.

கிழவிவீட்டுக் கூடத்தில் ஆள் நடமாட்டம் இல்லை.
பொன்னுக்கிழவி குசினிக்குள் ஏதோ சமையலில் கை வேலையாக இருந்தாள்.
பழைய சுறுசுறுப்பு அவளிடம் இல்லை என்றாலும் இப்போது கிழவி
பாவாயில்லை.வந்தவர்களுடன் ஏதோ கதை பேசிக்கொண்டே அவள் அடுப்பை
ஊதிக்கொண்டிருந்தாள்.
சரசு வந்த விடயத்தைச் சொல்லமுடியாமல் வாயடைத்துப்
போயிருந்தாள்.கிழவிக்கு ஏதோ புரிந்திருக்க வேண்டும்போல் சாசுவை ஓர்
ஏக்கப்பார்வை பார்த்துவிட்டு,தன் காரியத்தில் மும்முரமாக இறங்கி
விட்டாள்.
சமையல் முடிந்த கையோடு பெண்டுகளையும் அழைத்துக்கொண்டு பொன்னுக்கிழவி
கூடத்துக்குள் வந்தாள்.
சரசுவும் மற்றவர்களும் அதிர்ந்து போனார்கள்.கூடத்துக்குள் ஒரு மூலையில்
ஓர்பித்தளை அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.சந்தனக் குச்சி
வாசனையும் கூடவே வந்தது.பின்னால் சுவரில் அஞ்சலி என்ற பெரிய
எழுத்துக்களின்கீழ் கண்ணனின் படம் போட்ட ஓர் நோட்டீஸ்
ஒட்டப்பட்டிருந்தது.சாசுவுக்குக் கண்கள் கலங்கிவிட்டன.
கிழவி அவளைக்கட்டிப் பிடித்துக்கொண்டு கொஞ்ச நேரம் அழுதாள்.
பிறகு அழுகையை நிறுத்திவிட்டு நிதானமாய்ச் சொன்னாள்:
''என்ரை கண்ணன் கொஞ்ச நாளைக்குமுதல் மோசம் போயிட்டான்.''
அதோடு பொன்னுக்கிழவி திரும்பிக் குசினிக்குள் போய்விட்டாள்.
அவள் மனதிற்குள் கண்ணன் செத்துப்போன சோகத்தோடு சனம் செத்துப்போகிறது
என்ற ஏக்கம் வலுத்திருந்தது.

# நன்றி!



பூவரசு இனிய தமிழ் ஏடு,
அச்சு எழுத்துக்களில் வெளிவரவேண்டும் என்பதில்
எமக்கு ஆர்வத்தையூட்டிய அன்பர்
திரு: ஸ்ரீபதி (தலைவர், பிராங்போர்ட்-தமிழ் மன்றம்.)
அவர்களுக்கு எமது நன்றிகள்.
அவரது தமிழ்ப்பணி தொடர வாழ்த்துக்கள்!

www.tamilarangam.net

# நாடுகளை நாமறிவோம்.

**சோவியத் யூனியன்.**

1922ம் ஆண்டு ஜோசப் ஸ்டாலினால் உருவாக்கப்பட்ட ஐக்கிய சோஷலிச சோவியத் குடியரசுடன்1939ம் ஆண்டு ஜேர்மனிக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தையடுத்து ஸ்டாலின் 3 பால்டிக் நாடுகளையும் (BALTIC STATES) 1940ம் ஆண்டு தன்னோடு இணைத்துக்கொண்டார். அண்மையில் இடம்பெற்ற சதி முயற்சிக்குப்பின் 15 குடியரசுகளைக்கொண்ட சோவியத் யூனியனில் பல குடியரசுகள் சுதந்திரப்பிரகடனம் செய்துகொண்டுள்ளதை அடுத்து இன்று சோவியத் யூனியனின் எதிர்காலம் தெளிவற்றதாகவே உள்ளது எனலாம்.

**சோவியத் யூனியனின் குடியரசுகள்**

1.ரஸ்யா (RUSSIA):
சோவியத் யூனியனின் குடியரசுகளில் மிகவும் பெரிய குடியரசு.
148 மில்லியன் மக்கள்தொகையைக்கொண்டது.
அண்மையில் சோவியத் யூனியனில் இடம்பெற்ற சதிமுயற்சியை முறியடித்த பெருமை ரஸ்யாவுக்கும் அதன் ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சினுக்கும் உண்டு.

2.உக்கிரெய்ன் (UKRAINE):
51.8மில்லியன் மக்கள் தொகையைக்கொண்ட இக்குடியரசு தொழிற் துறையிலும் விவசாயத்துறையிலும் முன்னேற்றமடைந்துள்ளது.
ஆகஸ்ட் 24ம் திகதி சுதந்திரப்பிரகடனம் செய்த குடியரசுகளில் இதுவும் ஒன்று.

3.உஸ்பெக்கிஸ்தான் (UZBEKISTAN)
இதன் மக்கள் தொகை 20.3 மில்லியன்.

4.கசக்ஸ்தான் (KAZAKHSTAN):
மக்கள்தொகை 16.7 மில்லியன்.

5.பெலோரஷ்யா (BELORUSSIA):
ஆகஸ்ட் 25ல் சுதந்திரப்பிரகடனம் செய்துகொண்ட இக்குடியரசின் மக்கள்தொகை 10.3 மில்லியன்.

6.அசபைஜான் (AZERBAIJAN):
மக்கள்தொகை 7.1 மில்லியன்.

— எஸ்.கந்தசாமி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

7.ஜோர்ஜியா (GEORGIA):
நவம்பர்1990ல் சுதந்திரப்பிரகடனம் செய்த இக்குடியரசு 5.5 மில்லியன் மக்கள் தொகையைக்கொண்டது.
8.டட்ஷிகிஸ்ரான் (TADZHIKISTAN):
இதன் மக்கள்தொகை 5.3 மில்லியன்.
9.கேகிஷியா (KIRGHIZIA):
4.4 மில்லியன் மக்கள்தொகை.
10.மொல்டேவியா (MOLDAVIA):
மக்கள் தொகை 4.4 மில்லியன்.இது சுதந்திரப்பிரகடனம் செய்துகொண்டது ஆகஸ்ட் 27ல்.
11.ரேக்மெனிஸ்ரான் (TURKMENISTAN):
3.6 மில்லியன் மக்கள்தொகையைக்கொண்டது.
12.ஆர்மேனியா (ARMENIA):
3.3 மில்லியன் மக்கள்தொகையைக்கொண்ட இக்குடியரசு 1990 ஆகஸ்ட்டில் சுதந்திரப்பிரகடனம் செய்தது.
13.லித்துவேனியா (LITHUANIA):
3.7 மில்லியன் மக்கள் தொகையைக்கொண்ட இக்குடியரசு 1990 மார்ச் மாதம் சுதந்திரப்பிரகடனம் செய்தது.
14.லட்வியா (LATVIA):
2.7 மில்லியன் மக்கள் தொகையைக்கொண்ட இக்குடியரசு ஆகஸ்ட்20ல் சுதந்திரப்பிரகடனம் செய்துள்ளது.
15.எஸ்ரோனியா (ESTONIA):
1.6 மில்லியன் மக்கள் தொகையைக்கொண்ட இக்குடியரசு ஆகஸ்ட் 19ல் சுதந்திரப்பிரகடனம் செய்துள்ளது.

லித்துவேனியா,லட்வியா,எஸ்ரோனியா ஆகிய குடியரசுகளின் சுதந்திரப்பிரகடனத்தை பல நாடுகள் அங்கீகரித்துள்ளன.

*சோவியத் ஜூனியனின் அரசியல் வரலாற்றில் சில முக்கிய சம்பவங்கள்:*

1917ம் ஆண்டு: உலகின் முதலாவது மாக்ஸிய அரசை லெனின் சோவியத் ஜூனியனில் நிறுவினார்.
1922ம் ஆண்டு:ஜோசப் ஸ்டாலின் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளரானார்.உடல் நலமற்றிருந்த லெனினின் எதிர்ப்பையும் மீறி எனைய குடியரசுகளையும் ரஷ்ய குடியரசையும் இணைத்து ஐக்கிய சோஷலிச சோவியத் குடியரசை நிறுவினார்.
1924ம் ஆண்டு:லெனின் மரணமானார்.
1927ம் ஆண்டு:ஸ்டாலின் பதவியேற்றார்.
1939ம் ஆண்டு:ஜேர்மனி—சோவியத் ஜூனியன் ஒப்பந்தம்.
1953ம் ஆண்டு: ஸ்டாலின் மரணமானார்.குருஷேவ் தலைமையேற்றார்.
1964ம் ஆண்டு:குருஷேவ் நீக்கப்பட்டு பிரஷ்னேவ் அதிபரானார்.
1982ம் ஆண்டு:பிரஷ்னேவ் மரணமானார்.யூரி அந்திரபோவ் அதிபரானார்.
1984ம் ஆண்டு:கொன்ஸ்ரன் சேர்னன்கொ அதிபரானார்.
1985ம் ஆண்டு: மிக்காயில் கொர்பச்சேவ் அதிபரானார்.

(அச்சு இதழ்: ஏடுகள்.)

www.tamilarangam.net

# விமர்சன மலர்கள்.

பூவரசு நிழலினிலே
புதுப்பாடல் கேட்டிருந்தேன்
பூத்திட்ட மலர்களெல்லாம்
புதியவையாய் மணம் கமழ
பூத்த மலர்தமை நுகர்ந்து
பூவரசு நிழலமர்ந்தேன்
பூவரசே உன் கிளையில்
பூக்கட்டும் இன்னும்
புதிதாய்ப் பல மலர்கள்.

வாழ்த்திடும்,
கே.ஸ்ரீதாஸ். (நெதர்லாண்ட்)

''பூவரசு நிழலினிலே புதுப்பாட்டுக் கேட்கிறது!'' கவிதைத்தொகுப்பில் வெளியான கவிதைகள் பல எரிதழலில் எண்ணெய் வார்த்ததைப்போல், நம் மண் வாழ் மக்களை எண்ணி ஏங்கிட வைத்தது.
குறிப்பாக,சிந்திப்போம் என்கின்ற கவிதை சிந்திக்க வைக்கிறது. ஆனால் நாம் மட்டுமே சிந்தித்து என்ன பயன்? சிந்திக்க வேண்டியவான்றோ சிந்திக்க வேண்டும்.

கௌரி கணா. (ஜேர்மன்)

எங்கள் இளந்தளிர்கள் பகுதியில் வெளியாகும் கதைகளும் சித்திரங்களும் நன்றாக இருக்கின்றன. படங்களை வரையும் அருண் அண்ணாவுக்கு எங்கள் பாராட்டுதல்கள்.
இன்னும் இதுபோல் நிறையக்கதைகள் பூவரசில் வெளிவரவேண்டும் என்று விரும்புகிறோம்.

செல்வி கஜானினி ஞானப்பிரகாசம்.
(ஜேர்மன்)

www.tamilarangam.net

## பிறேமன் நகரிலிருந்து பூவரசு வாசகர் திரு:ஜோர்ஜ் எழுதுகிறார்

பூவரசு ஐந்தாவது இதழில் சந்திப்போம் சிந்திப்போம் என்கின்ற புதிய பகுதி அறிமுகமாகியிருந்தது.பயனுள்ள பகுதி. சந்திப்போம் சிந்திப்போம் பகுதிமூலம் ஒரு சிந்தனைச்சந்திப்புக்கு எனது எண்ணங்களை எழுதுகிறேன்.(எதிர்வாதம் செய்வது என் நோக்கமல்ல)
''சில விட்டுகொடுப்புக்களுக்கும் சஞ்சிகைகள் முன்வரவேண்டும்.கூறின், பூவரசு வாசகர்களின் அரசியற் கருத்துக்களையும் ஏற்க முன்வரவேண்டும்.'' என்று வாசகர் பீற்றர் குலம் விடுத்த வேண்டுகோளை பூவரசு ஆசிரியர் தட்டிக்கழித்திருக்கிறார்.
''அரசியலும் சினிமாவும் இன்றைய சமூகங்களை அளவுக்கு அதிகமாகவே பாதித்திருக்கின்றன.இந்தப்பாதிப்பினாலேயோ என்னவோ அரசியல் சினிமா சங்கதிகளைப்பெருமளவு சுமந்து கொண்டு நிறையப்பத்திரிகைகள் சஞ்சிகைகள் வெளியாகின்றன.அரசியல், சினிமா என்பன அருவருக்கத் தக்கவைகள் அல்ல,எனினும் அவை மட்டுமே வாழ்க்கைக்கு உரியன என்ற கருத்தைத்தான் பூவரசு ஏற்கவில்லை.''என்பது ஆசிரியரின் கூற்று.
அவ்வாறெனில்-
சமூகங்களைப்பாதிக்கின்ற தீய சங்கதிகள் கொண்ட சினிமாவையும், அரசியலையும் புறக்கணித்துவிட்டு,நல்ல விஷயங்களைத் தருகின்ற சினிமாவையும்,அரசியலையும் பூவரசு தாங்கி வரலாமே.சினிமாவின் அருவருக்கத்தக்க அம்சங்களையும்,அரசியலில் தரங்கெட்ட தீர்க்கமற்ற சிந்தனைகளையும் ஒதுக்கிவிட்டு,தரமான கருத்துள்ள சினிமாவையும், அவசியமானதும் தீர்க்கமானதுமான அரசியல் கருத்துக்களையும் பூவரசு தாங்கி வருவதில் தவறில்லையே.
அதுவும்,இடம் பெயர்ந்த தமிழர்கள் தங்கள் மண்ணையும் தம் மக்களையும் தம் மனத்தில் கொள்ளவும்,அதற்கேற்பத் தங்களை உருவாக்கத்தக்க கட்டுரைகளை வெளியிடுவதில் தவறில்லை என்பதோடு அது அவசியமானதும்கூட.
அதற்காக, இங்கிருந்துகொண்டு சேற்றை அள்ளி வீசுவதுபோல்,அல்லது இங்குள்ள மக்களைக்குழப்புவதுபோல் எழுதப்படும் சொல்லலங்கார அரசியல் கட்டுரைகளைத்தவிர்க்கலாம்.
ஆக்கபூர்வமாகப் பயன்படும் ஒரு குடும்பச் சஞ்சிகையாக பூவரசு நிறைவுபெற கவிதை,கதை,கட்டுரைகள், மாதர்பகுதி,சிறுவர்பகுதி இவற்றோடு,தரமான அரசியற் கருத்துக்கள்,தரமான சினிமாக் கருத்துக்கள் இவைகளும் பூவரசு இனிய தமிழ் ஏட்டில் இடம் பெறலாம் என்பது எனது அபிப்பிராயம்.

---

# சந்திப்போம்;
# சிந்திப்போம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்பு வாசகருக்கு!

தங்கள் கருத்துக்களுக்கு நன்றி.
சந்திப்போம் சிந்திப்போம் என்கின்ற இந்தப்பகுதியினூடாக
படைப்பாளர்கள்,வாசகர்கள் தங்கள் கருத்துக்களைப்பகிர்ந்து
கொள்ளவேண்டும் என்கின்ற பூவரசின் விருப்பத்தை ஏற்று தங்கள்
கருத்தைத் தந்திருக்கிறீர்கள்.
இன்று சமூகங்களால் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற
அனைத்துச்சங்கதிகளிலும்
நன்மை,தீமை இரண்டும் கலந்துதான் இருக்கின்றன என்பதை
நான் மறுக்கவில்லை.எனவே அரசியலோ,சினிமாவோ அது எதுவாயினும்
அதிலுள்ள தீயவைகளைக் களைந்துவிட்டு நல்லவைகளை
ஏற்றுக்கொள்வதில் தவறில்லைத்தான்.
ஆனால்,ஒருவரது பார்வையில் நல்லதாகத் தெரிகிற
ஒன்று இன்னொருவர் பார்வையில் தீயதாகத்தெரிகிறது.
அவ்வாறெனில் எவரது கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்வது
என்கின்ற கேள்வி எழுகிறது.
இவைகளை ஆராய்ந்து நமக்கு நன்மையாகத்தெரிகின்ற
ஒரு கருத்தை நாங்கள் முன்வைக்கிறபோது அது
ஒருபக்கச்சார்பாகி விடாதா?
அவ்வாறாயின்,நடு நிலை என்கின்ற ஒரு வார்த்தைக்கே கூட
அங்கு மதிப்பற்றுப் போகிறது அல்லவா?
பூவரசு என்கின்ற இந்த-
உங்கள் இனிய தமிழ் ஏடு மேற்கு ஜேர்மனியின் பிறேமன்
நகரிலிருந்து துளிர்விட்ட காலம் ஒரு பொல்லாத நேரம்.
உலக அரங்கில் -மூன்றாவது உலகமகாயுத்தம் மூண்டுவிடுமோ
என்று முழு உலகமுமே அஞ்சிக்கொண்டிருந்த நேரம்...
-மனிதர்கள் வாழ்க்கையை நேசிப்பார்களா?மரணத்தை
நேசிப்பார்களா?
-இதிலே,சொந்த மண்ணைத்துறந்து,எங்கெங்கேயோ வந்தேறு
குடிகளாய் வாழப்பழகிக்கொண்டுவிட்ட நம்மிடையே
சிந்தனையாளர்கள் எத்தனைபேர் என்று தேடிக்கொண்டிருக்கும்
நேரமா இது?
அவரவர் உயிர் அவரவர்க்கு முக்கியம்.
எனக்கும்தான்...உங்களுக்கும்தான்.
என்றாலும் எங்கள் உயிர் பிழைத்திருக்கும்போது அடுத்த உயிரும்
காக்கப்படவேண்டும் என்று நாங்கள் துடிக்கிறோமே அதுதான்
மனிதாபிமானம்.
நாம் முதலில் மனிதர்களாகிறோம்...
அதற்குப்பிறகுதான் தமிழர்களாகிறோம்.
காலங்களை ஒட்டியதே காத்திருப்புக்களும்.
சிந்திக்கத்தெரிந்தவர்கள் அல்லது கலை இலக்கிய
ஆர்வலர்கள் பலர்,வெளி நாடுகளில் குடியேறிய காலந்தொட்டு
பல்வேறுவகையான எழுத்து முயற்சிகளில் ஈடுபட்டு
வந்திருக்கிறார்கள்.

www.tamilarangam.net

சஞ்சிகைகளை வெளியிடும் முயற்சி என்பது
சாதாரணமானதல்ல என்பதால் பெரும்பாலானவை
தோல்வியிலேயே முடிவடைந்திருக்கின்றன.
ஏற்கனவே 70களில் நம் தாயகத்தில் ''இதயம்'' என்கின்ற
இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டு கையைச் சுட்டுக்கொண்டவன்
நான்.
வாசகர்களுக்காகப் பத்திரிக்கை நடத்தாமல்
வெறுமனே இலக்கியம் படைப்பதால்வரும் விளைவுகளை
அது எனக்கு உணர்த்தியது.
ஆயினும்,காலம் மாறியபோதும் மாறாத கலை இலக்கிய
தாகம்,என்னோடொத்த கலை இலக்கிய நெஞ்சங்களைக்கண்டு
கருத்துக்களைப்பரிமாறிக்கொள்ளும்போதெல்லாம்.
மலர்கின்ற புதிய தலைமுறைக்காய் நாம் ஏதேனும் பணிபுரிய
முடியாதா என்கின்ற ஆதங்கம் என்னுள் எழும்.


அதன் விளைவே-
இப்போது உங்கள் கைகளில் தவழ்கின்ற பூவரசு.
70களில் இளைஞனாக இருந்த நானே 90களில் கிழவனாகி
நிற்கிறேன்.
உலகம் மாறியிருக்காதா..என்ன?
மலர்ந்திருக்கிற புதிய தலைமுறைக்காய்,அவர்களது கலை,
இலக்கிய ஆற்றலை வெளிக்கொணர்வதற்காய்,பிறந்ததே பூவரசு.
புதிய தலைமுறையின் சிந்தனைகள் வெறும் இலக்கியத்தோடு
மட்டும் தனித்து நிற்கவில்லை என்பதையும்,
இன்றைய கலைவடிவங்களிலும் அவர்கள் தங்கள் ஆர்வத்தைச்
செலுத்திவருகிறார்கள் என்பதையும் கருத்தில் கொண்டு
பூவரசு தன்னில் சில மாற்றங்களைக்கொணர விரும்புகிறது.
இந்த மாற்றங்களுக்குக் காரண கர்த்தாக்களான அவர்களே,
அல்லது, அவர்களுக்காய்சிந்திக்கிற நீங்களோ இதில் கவனம்
செலுத்தவேண்டும்.''
சினிமாவின் அருவருக்கத்தக்க அம்சங்களையும்,அரசியலில்
தரங்கெட்ட சிந்தனைகளையும் ஒதுக்கிவிட்டு தரமான
கருத்துள்ள சினிமாவையும்,அவசியமானதும்,
தீர்க்கமானதுமான அரசியல் கருத்துக்களையும்
பூவரசு தாங்கிவருவதில் தவறில்லையே.''
என்கின்ற உங்கள் கருத்தோடு ஒத்துப்போகிற சிந்தனையாளர்கள்
படைப்பாளிகளிடமிருந்து பூவரசு ஆக்கங்களை வரவேற்கிறது.
மறுபடியும்,
சந்திப்போம் சிந்திப்போம்.

அன்புடன்,
சின்னையா மகேஸ்வரன்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூவரசு நிழலினிலே
# புதுப்பாட்டுத் தொடர்கிறது.



## விலங்குகள் சிரித்தன.


வேட்டையாட வந்தவனை
வாவேற்று
உபசரித்து மகிழ்ந்தன
வன விலங்கினம்.
இதில் ஆச்சரியம் என் உமக்கு?
வேட்டை கொள்பவன்
தேடி அங்கு வந்தது
மானைக்கொல்லவல்ல,
மனிதனைக்கொல்வதற்கே.
மனிதனை மனிதன்
கொன்று மகிழ்வதனை கண்ட
விலங்கினங்கள் சிரித்தன.
மனிதனுக்குள்ள புத்தி
தங்களுக்கு இல்லை
அது அதிர்ஸ்டம் என்று
எண்ணி மகிழ்ந்தன.

செ. யோகநாதன்.

## சமாதானம்

வானத்தில் புறாக்களைப் பறக்கவிட்ட
மனிதன் சொன்னான்:
'நான் சமாதானத்தை நேசிப்பவன்.'
வானத்தில் பறந்த புறாக்கள்
அவனைப் பார்த்துச் சொல்லின:
'நீ பறக்கவிட்டது
சமாதானத்தின் சின்னமான
எங்களை மட்டுமல்ல
உன் மனத்திலிருந்த சமாதானத்தையும்தான்.
ஏனெனில் -
உன் உதடுகள்
சமாதானத்தை உச்சரித்தாலும்
உன் மனமென்னும் கழுகு கேட்பது
இன்னும் இன்னும்
மனித இறைச்சியைத்தானே!'

இளந்தீவகன்.



www.tamilarangam.net

## கருவறைப்பாடம்

நான் கருவாகி
நான்கே மாதங்கள்
ஆணா? பெண்ணா?என்று
ஆராய்ச்சியில் இறங்கும்
அவசர உலகத்தில்
ஆடம்பாம் எதுவுமின்றி
அமைதியாய்க் கிடக்கின்றேன்.
வறுமை
கருப்பைக்குள்ளும்
பெருமையாய்ப் புகுந்து கொள்கிறது
கவலைகள்
கௌரவ விருந்தினராய்
கருவறையைச் சூழ்ந்து கொள்கின்றன.
கருவிலேயே
என் கண்ணீர்ச்சுரப்பிக்குள்
ஒரு கங்கை திணிக்கப்படுகிறது.
இருதயத்துடிப்பும்
இடியின் அதிர்வுகளாய்
மாதங்கள் ஏழு
மறைந்து போனது.
என்பிரசவம்
இப்பொழுது
நிதர்சனமானது.
ஜனனிக்கு முன்னரே
உலகத்தைப் புரிந்ததில்
வாழ்க்கையைப்படிக்க-எனக்கு
வருடங்கள் ஆகாது!

ஜெகதீஸ்வரி இராஜரட்னம்.

---------

## மாறிவிடும்

பெண்ணே நீயும் நானும்
கருவறைக் கதவுகளைத்திறந்து
பத்து மாதத்தில்
எட்டிப் பார்த்தோம்
கை தட்டிக் கேட்டது எனக்காக
உன் அப்பன் கூட என்னைத்தான்
தொட்டுத்தூக்கினான் அன்பாக
பாவம் உன் அன்னை....
பத்து மாதத்தால் தலைகுனிந்தாள்
அப்பாவைத் திருத்திவிடு
அம்மாவை நிமிர்த்திவிடு
எல்லாமே மாறிவிடும்.

—இராஜன் முருகவேல்.

*

## புதிய பாதை

பெண்ணே சீதனம் என்னும்
நெருப்பினிலே நீ விழுந்து
சீற்ற வாழ்க்கை வாழுவது
உனக்குத்தெரிகிறதா
பெண் என்னும் பூமிது
சீதனமாம் தீ விழுந்து
கருகுகின்ற நிலைமாற்ற
நீங்கள்
காணவேண்டும் புதிய பாதை

பீற்றர் குலம்

---

பூவரசு ஒரு இனிய தமிழ் ஏடு
ஆண்டு மலர் அதிகபக்கங்களில் வண்ணமுகப்புடன்
தயாராகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*அன்புத் தம்பி தங்கைகளே!*
இன்று சிறுவர்களாக இருக்கும் நீங்களே,
நாளைய உலகத்தின் உயிர் நாடிகள்.
சிறுபிள்ளைகளாக இருக்கும் காலத்தில்
நீங்கள் கற்றுக்கொள்ளும் கல்வியும்,
நல்ல பழக்கவழக்கங்களும்,பண்பாடும்
நீங்கள் பெரியவர்களாகும்போது,
உங்கள் வாழ்க்கைக்கு மிகவும் பலன் தரும்.
அதனால்தான்—
''இளமையிற் கல் '' என்றார் ஒளவைப்பாட்டி.
எனவே,கற்கும் காலத்தில் நீங்கள்
நல்லவைகளையே தெரிந்து கற்கவேண்டும்.
நமது தாய்மொழியாம் தமிழில்
எத்தனையோ நற்பண்புகளைக் கற்றுத்தருகின்ற
நல்ல நூல்கள் இருக்கின்றன.அவைகளை நீங்கள்
கற்கவேண்டும்.
மூவாகு அடுத்த இதழிலிருந்து—
உங்கள் அறிவாற்றலை வெளிக்கொணரக்கூடிய
போட்டிகளுடன் *ஷோபா அக்கா* உங்களைச்சந்திக்கிறேன்.

# எங்கள் இளந்தளிர்கள்


*குழந்தைகளின் நேசன்*

*மாமரியாள் மடி தவழ்ந்து*
*மாதவனாம் சூசை மைந்தன்*
*மாசறு ஒளிப் பிரகாசனாய்*
*மனுக்குலத்தை மீட்டிடவே*
*மந்தை குடில் கொட்டிலிலே*
*மதுர கான இசையிடையே*
*மலர்ந்திட்டான் பிறந்து இங்கு.*

*மரிபாலன் எங்கள் ராஜன்*
*மஞ்சம் இன்றி கந்தையினுள்*
*மண்ணில் வந்த நாளிதனை*
*மகிழ்வோடு போற்றிடுவோம்*
*குழந்தைகளை நேசித்திட்ட*
*குழந்தை யேசு பாலனை நாம்*
*குதூகலமாய் வாழ்த்திடுவோம்.*

— ஷோபா அக்கா.

www.tamilarangam.net



ஆதவன்போல் வந்திடுக ஆனந்தம் தந்திடுக
மேதினியெங்கும் மேன்மை பெருக்கிடுக
தொண்ணூற்றி யொன்றின் துன்பங்கள் தீர்த்தே
தொண்ணூற்றி இரண்டே இனிது நீ வந்திடுக.

—ஆதவன்போல்..

உண்பதற்குணவின்றி உருக்குலையும் தேசங்கள்
தண்பொழில் மழைபெற்று தழைத்தோங்கச்செய்திடவே
வாழ்வில் நலிந்தோரும் தம் வளம் மெலிந்தோரும்
தாழ்வின்றித்தரணியிலே தலை நிமிர்ந்து வாழ்ந்திடவே

—ஆதவன்போல்

அவனிதழைத்தோங்க ஆராய்ச்சி மலிந்திடவே
அவலம் தருகின்ற ஆய்வுகள் நீங்கிடவே
வல்லரசுப் போராட்டம் வையகத்தைவிட்டே
இல்லாமல்போயொரு இன்பம் பிறந்திடவே

—ஆதவன்போல்

மண்வளமும் மொழிவளமும் பண்பாடும் தொழில்வளமும்
கண்ணான கலைவளமும் காலமெல்லாம் செழித்திட
எண்ணமெல்லாம் இனிதாக எல்லோரும் வாழ்ந்திடவே
தொண்ணூற்றி இரண்டே இனிது நீ வந்திடுக!

*மணிதாசன்*





www.tamilarangam.net


# தீயவரைச் சேராதே!



கொடுமைகள் புரிந்த சிங்கம் ஒன்றை,
மனிதர்கள் சிலபேர் கூண்டில் அடைத்தனர்.

''இனிமேல் கொடுமைகள் செய்யமாட்டேன்
என்னை வெளியே விடுங்கள்'' என்று
எல்லோரிடமும் கெஞ்சிற்று சிங்கம்.


இரக்கமுள்ள மனிதன் ஒருவன்
இதனை நம்பிப் பூட்டினைத் திறந்தான்.



செய்த உதவியைச்சிங்கம் மறந்தது.
''எனக்குக் கொடும்பசி உன்னை நான் உண்பேன்''
என்று அவன் மேல் பாய்ந்தது சிங்கம்.

''உன்னைக்காத்த என்னை நீ கொல்லுதல்
நீதியல்ல'' என்றான் மனிதன்.


www.tamilarangam.net



''பசிக்கு நீதி கிடையாது'' என்று
அவன்மேல் பாய முயன்றது சிங்கம்.

வழியில் வந்த நரியொன்று மனிதனின்
புத்தியீனத்தைப் புரிந்துகொண்டது.
''நரியே நீ ஒரு நியாயம் சொல்'' என
மனிதன் அதனைத் துணைக்கு அழைத்தான்.

''நடந்தது என்ன தெரிந்தால்தானே
நியாயம் சொல்லலாம்'' என்றார் நரியார்.



கூண்டில் புகுந்த சிங்கம் சொன்னது:
''இந்தக் கூண்டில் நான் இப்படி இருந்தேன்
அந்த வழியால் மனிதன் வந்தான்''

சட்டெனக் கூண்டைப் பூட்டிய நரியார்
மனிதனைப்பார்த்து மெதுவாய்ச் சொன்னார்:
''மூளையற்ற மனிதா...அறிவாய்!
கொடுமைகள்புரியும் சிங்கம் போன்ற
மனிதர்க்குக் கூட நீ உதவி செய்யாதே!''

கருத்து: இளந்திலகன்.  சித்திரம்: அருண்.

www.tamilarangam.net

# வெளிநாட்டவர்கள் வெறுக்கப்படுகிறார்கள்?

ஜேர்மனியில் வெளிநாட்டவர்களுக்கெதிரான தாக்குதல்கள்!

40 ஆண்டுகளாக அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்கும் குடியேற்றவாசிகளுக்கும் சொர்க்கபுரியாகத் தோற்றமளித்த ஜேர்மனியில் தற்பொது வெளிநாட்டவர்களுக்கு எதிரான கடுமையான தாக்குதல்கள் இடம்பெற்றுவருகின்றன.
கிழக்கு ஜேர்மனியில் 2%க்கும் குறைவாகவேயுள்ள வெளிநாட்டவர்களுக்கெதிராக இடம்பெற்றுவந்த தாக்குதல்கள் தற்போது மேற்குஜெர்மனியின் பல்வேறு நகரங்களிலும் பாவலாக இடம்பெற்றுவருகின்றன.
ஜெர்மனியில்,குறிப்பாக கிழக்குஜெர்மனியில் தற்போது நடைபெற்றுவரும் சம்பவங்கள் 1930ம் ஆண்டுகளில் ஜேர்மனியில் ஏற்பட்ட நிலையைப்போன்றதொரு நிலையை அடையலாம் எனப் பலர் அச்சம் தெரிவித்துள்ளனர்.
தீவிர வலதுசாரிகளின் தொகை அதிகரித்துவருகின்றதெனவும்,தற்போது 2000 தீவிரவாதிகளும் 20 ஆயிரம் ஆதாவாளர்களும் கிழக்கு ஜெர்மனியில் இருப்பதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.
இவ்வருடம்,கடந்த 8மாதங்களில் இடம்பெற்ற வெளிநாட்டவர்களுக்கெதிரான 400 தாக்குதல்களில் 220 கிழக்கு ஜெர்மனியிலும், 180 மேற்கு ஜெர்மனியிலும் இடம்பெற்றுள்ளன. 1990ம் ஆண்டில் முழு ஜெர்மனியிலும் 128 தாக்குதல்களே இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. அகதிகள்மீதான தாக்குதல்களில் இருந்து அகதிகளைப்பாதுகாக்க முனைந்த மனித உரிமை அமைப்புக்களின் ஆதரவாளர்களும் தீவிரவாதிக்ளினால் தாக்கப்பட்டுள்ளனர்.
கிழக்கு ஜெர்மனியிலுள்ள ட்ரெஸ்டன் (Dresden) நகரில் வியட்னாமைச்சேர்ந்த மோத கர்ப்பிணிப் பெண் ஒருவர் மோசமாகத்தாக்கப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.
நாசி தீவிரவாதிகளால் திட்டமிட்டு நடாத்தப்படும் இத்தாக்குதல்களின்போது பல இடங்களில் குறிப்பாக கிழக்குஜேர்மனியில் பொதுமக்களும் சேர்ந்து வெளிநாட்டவர்களுக்கெதிராக தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்குஜேர்மனியின் சக்சனி (Saxony) மாநிலத்தில்
அகதிகள் தங்கியிருந்த விடுதி தாக்கப்பட்டபோது 500க்கு மேற்பட்ட
பொதுமக்களும் கலந்துகொண்டுள்ளனர்.
மேற்கு ஜெர்மனியின் பல்வேறு நகரங்களிலும் இதுவரை நிகழ்ந்த
தாக்குதல்களில் பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்ததோடு சிலர்
மரணமடைந்தும் உள்ளனர்.
அகதிகள்பலர் தாம் தங்கியிருந்த வீடுகளுடன் சேர்ந்து எரிக்கப்பட்டுள்ளனர்.
அரசியல்கட்சிகளின் தலைவர்களும்,பல மனித உரிமை அமைப்புக்களின்
தலைவர்களும் மேற்படி தாக்குதல்களைக்கண்டித்துள்ளனர்.
சிலர் கண்டித்தபோதும் ஜேர்மன் மக்களின் உண்மையான பய உணர்ச்சி நீக்கப்பட
வெளிநாட்டினர்வருகை கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனக்கேட்டுள்ளனர்.சில
அரசியல் கட்சிகளோ,வெளிநாட்டினர்மீதான தாக்குதல்களுக்கு மறைமுக
ஆதரவு வழங்கிவருவதாகவும் தீவிரவாதிகளை உற்சாகப்படுத்துவதுபோல்
அறிக்கைகளை வெளியிட்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.
மேற்படி நிலைமைபற்றி கவலை தெரிவித்துள்ள அரசியல் கட்சிகள் அகதிகள்
வருகையைக் கட்டுப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்பற்றி ஆராய்ந்து
வருகின்றன..அரசியல் அமைப்பிலும் மாற்றம் கொண்டுவருவதுபற்றி ஆலோசனைகள்
தெரிவிக்கப்பட்டுள்ளன..அரசியலமைப்பில் மாற்றம் செய்யப்படாமலேயே அகதிகள்
வருகையைக்கட்டுப்படுத்த சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளதாக
இறுதியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.
இதன்படி—
அரசியல் தஞ்சம்வழங்கும் நாடொன்றினூடாக வரும் அகதி உடனடியாகத்
திருப்பி அனுப்பபடுவார் எனவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அரசுகளுடன்
ஜேர்மன் அரசு பேச்சுவார்த்தை நடாத்தி,கிழக்கு ஐரோப்பிய அகதிகளைத்
திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது
...

— எஸ். கந்தசாமி.

www.tamilarangam.net

மேலும், நாட்டோ (NATO) நாடுகளில் ஒன்றான துருக்கியிலிருந்து பெருந்தொகையான அகதிகள்வருவதை அந்நாட்டு அரசுடன் பேசி அகதிகளின் வருகையைக்கட்டுப்படுத்தவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
ஐரோப்பாவில் அரசியல் தஞ்சம் தேடிவருபவர்களில் 60% ஜேர்மனிக்குவரும் வேளையில் 20%த்தினர்மட்டுமே பிரான்சுக்கும்,3.5%த்தினர் மட்டுமே பிரிட்டனுக்( செல்கின்றனர்.

இவ்வருடம் ஜூலைமாதம் இறுதிவரைமட்டும் 113,000பேர் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். இது சென்ற ஆண்டைவிட 15%அதிகமாகும். யூகோஸ்லாவியாவிலிருந்தும் ருமேனியாவிலிருந்தும் தற்போது பெருந்தொகையானோ வருகின்றனர்.
C.D.U, C.S.U.,ஆகிய கட்சிகள் அரசியல் அமைப்பில் மாற்றம் செய்யவேண்டுமென்ரு கோரியுள்ளனர்.ஆனால்,S.P.D.,F.D.P. ஆகிய கட்சிகள் மேற்படி கோரிக்கையை நிராகரித்துவிட்டன.இதற்குப்பதிலாக அரசியல் தஞ்சம் கோருபவர்களின் விண்ணப்பங்கள் விரைவில் பரிசீலிக்கப்பட்டு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்கள் திருப்பி அனுப்பப்படவேண்டுமென இவர்( ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

ஜேர்மனி குடியேற்றவாதிகள் தொடர்பாகவும் அரசியல் தஞ்சம் கோருபவர்கள் காரணமாகவும் பெருமளவு பிரச்சனைகளை எதிர் நோக்கிய போதிலும்,தற்போது நடைபெற்றுவரும் வெளி நாட்டவர்களுக்கு எதிரான வன்செயல்கள் எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாதவைகளே.
இரண்டாவது உலக மகா யுத்தத்துக்குப்பின் ஜேர்மனி ஒரு ஆபத்தான காலகட்டத்தை நோக்கிச்செல்வதாகவும் சில அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.அக்டோபர் மாதம் நடுப்பகுதி முதல் நடைபெற்று வரும் சம்பவங்கள் இதை உறுதிசெய்வதுபோல் உள்ளன.
முன்னாள் கிழக்கு ஜேர்மனியில் பேர்லின் நகருக்கு வெளியே சோவியத் படை வீரர்கள் தங்கியிருந்த விடுதியொன்றை தாக்க முற்பட்ட தீவிரவாதிகளைக்கலைக்க சோவியத் காவலர்கள் எச்சரிக்கைத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டது.போலந்து நாட்டைச்சேர்ந்த உல்லாசப்பிரயாணிகள் மீதும் எல்லைக் காவலர்கள்மீதும் தாக்குதல்கள் நடைபெற்றன.சார்புருக்கன் நகரில் ஒரு தமிழ் இளைஞரை மூன்று ஜேர்மனியர் மயக்கமுறச்செய்து ரயில் பாதையில் விட்டுச்சென்றதன் விளைவாக அவரது வலதுகால் துண்டிக்கப்பட்டது.
பவாரியாவில் (BAVARIA)பல ஜேர்மானிய பொதுமக்கள் ஆரவாரம் செய்ய ஒரு ஆப்கானிய இளைஞர் ஜேர்மன் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டு இரண்டு மாடிக்கட்டிடத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டார். எசன் (ESSEN)நகரில் வெளி நாட்டவர் தங்கியிருந்த விடுதியொன்றின்மீது எரிகுண்டுகள் வீசப்பட்டதன் விளைவாக முறையே 8வயது,6வயதான இரு லெபனான நாட்டுச் சிறுமிகள் உருக்குலைந்து போயினர்.
இவ்வருட ஆகஸ்ட் மாத முதல் அக்டோபர் நடுப்பகுதிவரை வெளி நாட்டவர்களுக்கு எதிராக 700க்கு மேற்பட்ட தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதாகவும் இவற்றில் அக்டோபர் 2ம்,3ம் வாரங்களில்மட்டும் 100க்கு மேற்பட்ட தாக்குதல்கள் நடைபெற்றுள்ளதாகவும் பொலிசில் பதிவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயப்பப்பட்டுள்ளது.பொலிசில் முறைப்பாடு செய்யாத தாக்குதல்களும் பெருமளவு இடம் பெற்றுள்ளதாகவும் பத்திரிகைச்செய்திகள் தெரிவிக்கின்றன.
மேற்படி தாக்குதல்களுக்கு எதிராக அரசின் நடவடிக்கைகளோ கடுமையாக இல்லை.பல சமயங்களில் தாக்குபவர்கள்மீது எவ்வித நடவடிக்கைகளும் இல்லை.சில சமயங்களில் மட்டும் தாக்குதல்களில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு வழக்குகள் எதுவும் பதிவு செய்யப்படாமலேயே விடுதலை செய்யப்படுகின்றனர்.
கோயர்ஸ்வேடா (HOYERSWERDA) நகரில் சுவர்களில் ''வெளி நாட்டவர்களே வெளியேறு'' என்று முன்னர் எழுதப்பட்டிருந்த சுலோகங்கள், தாக்குதல்களை அடுத்து வெளி நாட்டவர்கள் வேறு நகருக்கு கொண்டு செல்லப்பட்டதன்பின்,''வெளி நாட்டவர்களை வெளியேற்றிவிட்டோம்''என்று மாற்றப்பட்டுள்ளன.
1930ம் ஆண்டுகளில் யூதர்களுக்கு எதிராகவும் இவ்வாறு எழுதப்பட்டது குறிப்பிடத்தக்கது.அடுத்த ஆறு மாதங்களில் ஒரு லட்சம் வெளி நாட்டவர்வரை திருப்பி அனுப்பப்பட உள்ளதாகவும் ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

*　*　*

## பிரான்சில் வெளி நாட்டவர் நிலை.

பிரான்சில் குடியேறும் வெளி நாட்டவர் மீதும் அகதிகள் மீதும் புதிய கட்டுப்பாடுகளை விதிக்க அரசு ஆலோசித்து வருகிறது.
இது நாள்வரை திரு.லுபென் தலைமையிலான தேசிய முன்னணியே வெளி நாட்டவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனக் கோரிவந்தது.
ஆனால் இப்போது வலதுசாரிக்கட்சிகள் மட்டுமின்றி ஆளும் சோஷலிஸ்ட் கட்சியினர் மட்டத்திலும் இதுசம்பந்தமாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.
அண்மையில் முன்னாள் ஜனாதிபதி ஜிஸ்காட் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையைக்கிளப்பிவிட்டுள்ளது.இது நாள்வரை பிரெஞ்சு மண்ணில் பிறக்கும் குழந்தைக்கு பிரெஞ்சுப் பிரஜை என்ற அந்தஸ்து கிடைக்கும்.இனிமேல் பெற்றோர் எந்தத் தேசிய இனமோ பிள்ளையும் அதே இனத்தையே சார்ந்திருக்க வேண்டும் என்று திரு ஜிஸ்காத்தெரிவித்த கருத்துக்கு பல மட்டங்களிலும் ஆதரவுகள் கிடைத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.
ஆண்டுக்கு ஒரு லட்சம் வெளி நாட்டவர்கள் பிறப்புக்கள்,திருமணங்கள்போன்ற காரணங்களினால் பிரெஞ்சுப் பிரஜாவுரிமை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.
மேலும் முறையான வசிப்பிட அனுமதிப்பத்திரமின்றியோ அல்லது வேலை செய்யக்கூடிய அனுமதிப்பத்திரங்கள் இன்றியோ உள்ளவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.
வேலை செய்யக்கூடிய அனுமதிப்பத்திரங்கள் இன்றியுள்ளவர்களை வேலைக்கு வைத்திருப்பவர்கள் இருவருட சிறைத்தண்டனையுடன் 20ஆயிரம் பவுண்ட்ஸ் அபாரதமும் செலுத்த நேரிடும் எனவும் அனுமதிப்பத்திரமின்றி வேலை

www.tamilarangam.net

செய்பவர்கள் 6மாத முதல் 3வருடம் வரையிலான சிறைத்தண்டனைக்கு உள்ளாவதோடு 10 ஆண்டுகள் பிரான்ஸிற்கு வருவதற்கும் தடைவிதிக்கப் படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அண்மையில்மேற்கொள்ளப்பட்ட கணிப்பொன்றின்படி 94வீதமான பிரெஞ்சு மக்கள் இனத்துவேஷம் பிரான்சுமுழுவதும் பாவி விட்டிருப்பதாகவும் 71வீதமானோர் அளவுக்கு அதிகமான அராபியர்கள் பிரான்சில் வாழ்வதாகவும் தெரிவித்துள்ளனர்.செப்.21ம் திகதி மேற்கொள்ளப்பட்ட இன்னுமொரு கணிப்பின்படி 40வீதமான பிரெஞ்சு மக்கள் ஒருவருடத்துக்கு மேலாக வேலைசெய்யாமல் இருக்கும் வெளி நாட்டவர்களும் குற்றச்செயல்கள் புரியும் வெளி நாட்டவர்களும் திருப்பி அனுப்பப்படவேண்டும் எனக்கருத்துத் தெரிவித்துள்ளனர்.குடியேற்றவாதிகளின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியவர் தேசிய முன்னணிக்கட்சியின் தலைவர் திரு.லுபென் மட்டுமே எனவும் இக்கணிப்பீட்டில் அதிகமானோர் தெரிவித்துள்ளனர்.
வேலைவாய்ப்புப் போன்ற முக்கியமான பிரச்சனைகளைவிட குடியேற்றவாதிகள் பற்றிய பிரச்சனையே பிரான்சின் அரசியல் அரங்கில் முதன்மையாக உள்ளது. திரு.லுபென்னின் தீவிர வலதுசாரிக்கட்சியான தேசிய முன்னணியின் ஆதரவு 15%இலிருந்து 20%ஆக அதிகரித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.
அடுத்தமுறை மீண்டும் ஜனாதிபதியாக விரும்பும் திரு. ஜிஸ்காட், குடியேற்றவாதிகள் விஷயத்தில் கடுமையான நடவடிக்கைகள் தமக்கு ஆதரவை மேலும் பெற்றுத்தரும் என்று நம்புகிறார்.
பரீஸ் நகர மேயரும் RPR கட்சித்தலைவருமான திரு.ஜாக் சிராக் அண்மையில் பிரான்சின் குடியேற்றவாதிகள் பற்றித்தெரிவித்த கருத்துக்களை அடுத்து அவரின் செல்வாக்கு 5%த்தால் அதிகரித்துள்ளதாகவும் ஒரு கணிப்பீடு தெரிவிக்கின்றது.

---

## சஞ்சிகையாளர்கள் கவனத்திற்கு!

1992 தைத்திங்களில் பிறேமனில் நடைபெறவிருக்கும் *பூவாசு* ஓராண்டு நிறைவுக் கலை,இலக்கிய விழாவில்-
இதுவரை ஐரோப்பிய நாடுகளில் வெளிவந்த-வெளியாகிக்கொண்டிருக்கிற அனைத்துச் சஞ்சிகைகளையும் பூவாசு வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறோம்.
சஞ்சிகையாளர்கள் தங்கள் சஞ்சிகையின் அறிமுகப்பிரதி ஒன்றுடன் அச்சஞ்சிகைபற்றிய சிறுகுறிப்புக்களையும் தந்துதவும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.தவிர்க்கமுடியாத காரணங்களினால் இடை நிறுத்தப்பட்டுள்ள சஞ்சிகைகளின் பிரதிகளும் வரவேற்கப்படுகின்றன.
பிரதிகள் வந்துசேரவேண்டிய இறுதித்திகதி டிசம்பர் 31.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்னை திரேசா.

- கே. ஸ்ரீதாஸ்

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

அன்னை திரேசா சிறுவயதிலேயே அறிவும் ஆற்றலும் மிகுந்தவராகத் திகழ்ந்தார்.தனது 12வது வயதிலேயே நாட்டுக்கு ஏதாவது செய்துவிட வேண்டுமென்று மனம் துடித்தார்.அந்த ஆவலினால் அவர் சோசல்டி என்னும் கிறிஸ்தவ மதக்குழுவில்,படித்துக்கொண்டிருக்கும் காலத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்.

இக்கிறிஸ்தவ சபையானது ஏழை எளியவர்களுக்கு பெரும்பங்கை அளித்து வந்தது.அன்னை திரேசா தன் படிப்பில் கவனம் செலுத்துவதைவிட இக்கிறிஸ்தவ சபைக்கே தன் முழுப்பங்கினை வழங்கினார்.அவரது சலிக்காத உழைப்பினைக்கண்டு அச்சபையின் பாதிரியார் அவரைப்பாராட்டிப் பேசுவார்.பாதிரியாரின் உற்சாகமூட்டும் வார்த்தைகள் அவரது ஆர்வத்தை மேன்மேலும் தூண்டி வளர்த்தன.

இச்சமயத்தில்தான் வங்காள தேசத்தில் பெரும் பஞ்சமும்,கொள்ளை நோயுமேற்படவே அங்கு பணியாற்ற இச் சோசல்டி குழு ஒன்று அங்கு சென்றது.வயதில் குறைவான அன்னை திரேசா இக்குழுவில் இடம் பெறவில்லை.இது அவரின் மனதை மிகவும் பாதித்தது.

அப்போது அவருக்கு வயது 13தான் உருவத்திலும் மிகச் சிறியவராகவே காணப்பட்டார்.

இது இவ்வாறிருக்க,யூகோஸ்லாவியாவில் உள்ள ஜேசு சபை என்ற ஒரு குழு இந்திய மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் கல்கத்தா சென்று பெரும் பணியை மேற்கொண்டது.அவர்கள் செய்கின்ற அளப்பரிய சேவைகளைப் பாராட்டி அங்குள்ள மக்கள் நிறையக்கடிதங்கள் எழுதுவார்கள்.

அக்கடிதங்கள் அல்பேனியாவில் உள்ள ஜேசு சபைக்கு அனுப்பப்பட்டு பின் அன்னை திரேசா உறுப்பினராயிருந்த சோசல்டி சபைக்கு அனுப்பப்படும். அங்கு எல்லோர் முன்னிலையிலும் அக்கடிதம் வாசிக்கப்படும்.அக்கடிதங்களில் கூறப்பட்ட விபரங்களை அறிந்தவுடனேயே அன்னை திரேசாவும் இந்தியா செல்லவேண்டும்.அந்த அரும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும் என்று துடித்தார்.தன் விருப்பத்தைப் பாதிரியாரிடம் கூறினார்.பாதிரியாரோ,உன்னுடைய இளகிய மனத்தையும் சேவை மனப் பான்மையையும் நான் நன்கு அறிவேன்.ஆனாலும் உனக்கு இன்னும் வயது இருக்கிறது காலப்போக்கில் பார்த்துக்கொள்ளலாம். கர்த்தர் உனக்கு அருள் புரிவாராக.என்று கூறிவிட்டார்.


திரேசா மனமுடைந்து போனாலும்,தன் முயற்சியைக் கைவிடவில்லை. மனிதராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஏதாவது ஒரு உயர்ந்த இலட்சியம் கொண்டிருத்தல் வேண்டும்.அதை அடைவதற்கு சோர்வு இல்லாத தளராத நம்பிக்கை வேண்டும் இந்த நம்பிக்கைகளையே பதியங்களாக வைத்து நாளைய வாழ்வுக்கு வழி காண வேண்டும்.

இதையே அன்னை திரேசா கருத்தில் கொண்டார்.

www.tamilarangam.net

அப்படியாயின் என் எண்ணம் என் மதிக்கப்படவில்லை?
நான் தகுதியற்றவளா? என்று தனக்குள்ளேயே ஒவ்வொரு நாளும் மனவேதனைப்பட்டார்.வங்காளதேசம் செல்லமுடியவில்லை...
இந்தியாவுக்கு செல்லும் ஆசையும் நிறைவேறாதா...
இறைவா இது என்ன சோதனை?
குறிக்கோள் இன்றி தன் போக்கிலேயே வாழ்கின்றவாழ்க்கையும், தனக்காகவே வாழ்ந்து மறைகின்ற வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா?
பிறருக்காக் வாழ வேண்டும், பிறருக்கு பயனுள்ளபடி வாழவேண்டும்
அவர்களின் துன்பங்களைத்துடைக்கவேண்டும் என்கின்ற என்லட்சியம் வீண்போய்விடக்கூடாது.என்று இறைவனை வேண்டி நின்றார் அன்னை திரேசா.

(தொடரும்)




ஒத்திகை நடக்கிறது!

www.tamilarangam.net

**இந்து மகேஷ்**

வாணி எனனருகில் வந்தமர்ந்தாள்.
வெண்ணிற ஆடையில் இருந்தாளேதவிர அவள் முகத்தில் கவலைகள் எதுமில்லை.
உதடுகளில் மெல்லிதான புன்னகை.
என் மார்பில் கையை வைத்து மெதுவாக வருடிவிட்டாள்.
''யார் செய்த புண்ணியமோ...தப்பிவிட்டீங்கள்.!'' என்றாள் மெதுவாக.
''செத்திருந்தால் நான் பாவாத்மாவா?'' என்றேன் கேலியாக.
வாணி அர்த்தத்துடன் என்னைப்பார்த்தாள்...
''பாவம் செய்ததாலைதான் மனிசருக்குச் சாவு வந்துதாம்...
அப்பிடியிருந்தும் இன்னும் இன்னும் மனிசன் பாவத்தைத்தானே செய்கிறான்?''
என்றாள் அவள்.
சிவசம்புவைப்போல் இவளிலும் இப்போது மாற்றம் தெரிகிறது...தத்துவம் பேசுகிறாள்.
வயதேற ஏற மனிதனுக்குச் சித்தாந்தங்கள்தான் பிறக்குமா?
அல்லது அடுக்கடுக்காய்த் தொடர்கின்ற துன்பங்களைத்தாங்க முடியாமல் மனிதன் வேதாந்தத்தில் வீழ்ந்துவிடுகிறானா?
''தத்துவத்தை விடு வாணி...நீ எப்ப இந்த ஊருக்கு வந்தனி?
உன்ரை கணவருக்கு என்ன நடந்தது?...உன் பிள்ளைகள் எங்கை?...''
அவளை வேதாந்தத்திலிருந்து மீட்க முயன்றேன் நான்.
''அதெல்லாம் முடிஞ்சு போனகதை..!'' என்றாள் வாணி.



# மனிதனைத் தேடுகிறேன்.

www.tamilarangam.net

''காலம் மாற மாற எல்லா மனிசரும் மாறிப்போயிருக்கிறபோது என்ரை அவர் மட்டும் எப்பிடி மாறாமல் இருப்பேர்...கல்யாணம் கட்டி ரெண்டு ஆம்பிளைப் பிள்ளையள பிறந்து அவங்களும் கொஞ்சம் வளர்கிறவரைக்கும் செல்லாக்காகவும் என்னிலை அன்பாகவும் இருந்த மனிசன் காலப்போக்கிலை கூடாத கூட்டமெல்லாம் கூடத்தொடங்கிவிட்டுது...இங்கை சண்டையள தொடங்க அங்கை அந்தாள் என்னை அடிக்கத்தொடங்கிவிட்டுது....அவரை விட்டுப்போட்டு பிள்ளையளையும் கூட்டிக்கொண்டு இங்கை வருவமெண்டால் அவங்கள தகப்பன்ரை பக்கம்தான்...தாய் என்கிற பாசத்தைவிட நான் தமிழிச்சி என்ற வெறுப்புத்தான் அவங்களுக்குக் கூடுதலாக இருந்துது....அவர் உயிரோடை இருக்கிறவரைக்கும் அங்கையே பல்லைக் கடிச்சுக்கொண்டு இருந்தன்..போனவருசம் ஒரு விபத்திலை அவரை நான் இழந்திட்டன்...அதுக்குப்பிறகு அங்கை வாழப்பிடிக்கேல்லை...!''
''உன்ரை பிள்ளையள்..?''
''அவங்களை கண்ணாலை கண்டு ரெண்டு வருசமாச்சுது...!'' என்றாள் வாணி குரலில் தாய்மையின் ஏக்கம் படர்ந்திருப்பதாகத் தோன்றிற்று.
''இனி என்ன...முடியப்போற வாழ்க்கைதானே ...என்ரை தாய் பிறந்த ஊரிலையே சாவமே எண்டுதான் இங்கைவந்தன் ...ஆனா...இங்கையும் ஒரு வெறுமைதான் தெரியுது...சாவிலையும் ஒரு நிம்மதிவருமா எண்டுதான் தெரியேல்லை.!''
வாணி மௌனித்தாள்.
எனக்குள் ஒரு விரக்திகலந்த வெறுமை பரவுவதை உணர்ந்தேன் நான்.
வாழ்கின்ற காலத்தில் நினைப்பவைகள் எதும் நடப்பதில்லை...
நிறைவேறுகிற ஆசைகளும் நிம்மதியைத்தருவதில்லை....பிறகு
ஏனிந்த வாழ்க்கை...இது என்ன வாழ்க்கை...?
''அது என்னவோ...நான் சாகிறதுக்குமுதல் உங்களை ஒருக்கால் சந்திச்சிற்றுச் சாகவேணும் எண்டு எனக்குள்ளை ஒரு ஆசை...!''என்றாள் வாணி திடீரென.
''ஆனா..இப்பிடி ஒரு நிலைமையிலை உங்களை நான் சந்திக்கவேண்டி வருமெண்டு நான் நினைக்கேல்லை.!''
''நினைக்கிறது எதுதான் நடக்குது!'' ''என்றேன் நான் மெதுவாக.
''என்னை நீங்கள் உயிருக்குயிராய் நேசிச்சீங்களாம்...என்னை மறக்க முடியாமல்தான் நீங்கள் கெட்ட பழக்கமெல்லாம் பழகினீங்களாம்....
சிவசம்பு அண்ணை சொன்னேர்....ஆனா..மச்சான்..அது என்ன காதலா?..
சின்னப்பிள்ளையள் மண்வீடு கட்டி விளையாடிறதுமாதிரி....
அந்தந்த நேரம் ஒண்டாய் இருந்து சந்தோசமாய்க் கதைச்சுச் சிரிச்சு ..ஓடிப்பிடிச்சு விளையாடி..அந்தக்கணத்திலையே அதை மறந்துபோகிற வயசு....அதைக் காதலெண்டு எப்பிடி நீங்கள் சொல்லுவீங்கள்..?..எனக்கு அறிவு தெரிஞ்சு,என்னோடை படிச்ச சிங்களப்பெடியனிலை மயங்கி. ரெண்டுபேருமாய்ச் சேர்ந்து வாழவேணுமெண்டு முடிவெடுத்ததைத்தான் நான் காதலெண்டு நினைச்சன்....ஆனா ..அது கூட வெறும் பிரமையெண்டு எனக்கு இப்பதான் விளங்குது..இதிலை காதலெண்டு ஒண்டுமே இல்லை மச்சான்...வேணுமெண்டால் கொஞ்சம் அளவுக்கு மிஞ்சின அன்பு...
அவ்வளவுதான்...!''
''கதைச்சு முடிச்சிட்டியா..?''என்றேன் நான்.

www.tamilarangam.net

"ஒரு ஆணும் பெண்ணும் ஒருத்தரிலை ஒருத்தர் வச்சிருக்கிற அன்பு அளவு கடந்திட்டால் அது காதல்தான்...நீ என்ரை மச்சாள் என்கிற உணர்வு மட்டுமில்லை அதைவிட வேறை ஏதோ ஒரு அளவு கடந்த அன்போடை சேர்ந்த இலயிப்பு...அதாலைதான் உன்னைத்தவிர எனக்கு வேறொதையும் நினைக்கவே முடியேல்லை...வாழ் நாள்முழுக்க உன்னை விட்டுப்பிரியக்கூடாது என்கிற ஒரு உள்ளுணர்வு எனக்குள்ளை வளர்ந்துகொண்டே வந்துது...நீ ஆரையோ கட்டிக்கொண்டாய் எண்டு கேள்விப்பட்டபோது என்னையே என்னாலை நேசிக்க முடியேல்லை.. அதாலைதான் நான் மாறத்தொடங்கினன்.."

"நீங்கள் துன்பப்பட்டால் உங்களை நீங்களே அழிச்சுக்கொள்கிறதைக்கூட ஒத்துக்கொள்ளலாம்...ஆனா..உங்கடை துன்பத்திலையிருந்து நீங்கள் தப்பிறதுக்காக மற்றவையளை நீங்கள் அழிக்கிறது எந்தவகையிலை நியாயம்?"

-வாணியின் அந்தக் கேள்வியில் நான் சற்று அதிர்ந்தேன்... யாருக்கும் தெரியாதென்று நான் மறைத்து வைத்திருக்கிற அந்த இரகசியத்தை இவள் தெரிந்து கொண்டுவிட்டாளா.. எப்படி..?

ஒருவேளை இவள் என் மனதுக்குள் குடியிருப்பதால் என் மனத்தில் உள்ளவைகளைத் தெரிந்துகொண்டுவிட்டாளா...என்ன?

(தொடரும்)

---

அன்பு வாசக நெஞ்சங்களுக்கு!
உங்கள்-
இனிய தமிழ் ஏடான பூவரசு
இந்த இதழுடன் ஓராண்டைக் கடக்கிறது.
மலரும் ஆண்டிலிருந்து புதிய அம்சங்களுடன்,
பூவரசு உங்களை நாடிவரும்.
என்றும்போல் உங்கள் ஆதரவு
பூவரசு வளர்ச்சியுறத் துணைபுரியும் என்று
மனப்பூர்வமாக நம்புகிறோம்.
புதிய ஆண்டில் உங்கள் சந்தாக்களைப்
புதுப்பித்துக்கொள்வதுடன்,
பூவரசு வளர ஆக்கபூர்வமான
ஆலோசனைகளையும் வழங்குவீர்கள் என்றும்
எதிர் பார்க்கிறோம்.
இது உங்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கும்
இனியதமிழ் ஏடு.
இதன் வளர்ச்சி உங்கள் கரங்களிலேயே என்பதை
மறவாதீர்கள்.

அன்புடன்:
சின்னையா மகேஸ்வரன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஞ்சலி.

மண்ணில் பிறந்த உயிர்களுக்கெல்லாம்
மரணம் என்பதும் கூடவே பிறந்தது.
மற்றவர் தமக்காய் வாழ்பவர்க்கென்றும்
மரணம் என்பது இல்லவே இல்லை.
தாயை மறந்து வாழ்பவர் உண்டு
தாயில்லாமல் பிறந்தவர் உண்டா?
மண்ணை மறந்து வாழ்பவர் உண்டு
மண்ணில்லாமல் வாழ்ந்தவர் உண்டா?
சுய நலம் தேடும் மனிதர்கட்கெல்லாம்
சொந்தம் என்பது இல்லவே இல்லை.
பிறர் நலம் நாடிய உங்களை நாங்கள்
பிரிந்தோம் என்பதும் இல்லவே இல்லை.
உங்களை நாங்கள் இழந்தோம் என்பதால்
எங்களை நாங்கள் இழந்தவரானோம்.
சுதந்திரக்காற்றைத் தேடி நாங்கள்
சுவாசிக்கின்ற நாள் வரும்போது
அந்தக் காற்றில் உங்கள் மூச்சும்
கலந்தேயிருக்கக் காண்போம் என்பதே
இன்று எங்கள் இதயத்தின் பலம்.

அகாலவிபத்தில் உயிர் நீத்த எங்கள்
அன்புச்செல்வங்கள்:
*நமசிவாயம் சுரேந்திரகுமார்*
*(சுரேந்தி),*
*குருநாதர் கிருஷ்ணமூர்த்தி*
*(குஞ்சன்),*
*தர்மலிங்கம் செனத்தூரானன்*
*(செனத்தி),*
*திருமதி செனத்திரானன்,*
*சபேவா* ஆகியோரின் நினைவாக!

* * *

www.tamilarangam.net

— புஷ்பராணி ஜோரஜ்

''மம்மி நான் பிரகாஷ் பேசுகிறேன். எனக்கு ஸ்கொலர்ஷிப் கிடைத்துள்ளது அதைச்சொல்லத்தான் போன் எடுத்தேன்.இன்று 4மணிக்கு வருவீர்கள் தானே! நேரில் கதைக்கலாம் மம்மி.''
அமைதியுடன்.மனமகிழ்வுடன் போனை வைத்துவிட்டு எனது அன்றாடக் கடமைகளைச்செய்ய ஆயத்தமாகிறேன்.
இதன்பிறகு இந்தவாரம் என்மகனிடம் (உன்னிடம்) நான் கேட்கிறேன்:
''பிரகாஷ்..உன்னை ஒரு பெற்றோர் வளர்க்கப் போகிறார்களாம்..நல்ல குடும்பப் அப்பா அம்மா இருவரும் உண்டு நீ கொஸ்ரலில் இருக்கவேண்டியதில்லை. வீட்டில் இருந்தே பாடசாலை போகலாம்.அவர்களுடன் போய் இருக்கிறாயா'?''
எனக்கேட்டேன்.
''நோ நோ நான் யாருடனும் போகமாட்டேன்.எனக்கு அப்பா அம்மா இல்லை என்று என்னை நீங்கள் எடுத்து வளர்ப்பதாக நீங்கள்தானே என்னிடம் கூறினீர்கள் என்னை வளர்ப்பதற்காகத்தானே நீங்கள் தனியாக வாழ்கிறீர்கள்....அதனால் உங்களுக்காக நானும் வாழுவேன்..
என் மம்மி நான் உங்களுக்கு பாரமா'?''என்று நீயழுதபடி கேட்டாய்.
''இல்லை பிரகாஷ்.. உனக்கு அப்பா வேண்டும் என்ற ஆசை உண்டா என்று பரீட்சிக்கவே இப்படிக்கேட்டேன் ..மம்மி உன்னை யாருக்கும் கொடுக்கமாட்டே என்று சொல்லி உனை நான் கட்டி அணைத்து முத்தம் பொழிந்தேன்.
இதற்கு அடுத்தவாரம் வாத ராஜனின் கடிதம் ஒன்று வந்திருந்தது.
தான் அடுத்த வெள்ளியன்று என்னிடம் வருவதாக!
ஒரு குழந்தையைத்தத்து எடுக்கும் விசயத்தில் தனக்கும் தன் மனைவிக்கும் இடையில் நடந்த வாக்கு வாதத்தையும் அவர் தன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.
வெள்ளிக்கிழமை எக்காரணம்கொண்டும் நான் நிற்கப்போவதில்லை என்பது அவருக்குத்தெரிந்திருக்க நியாயமில்லை.
அதைவிட அவரைத்தொடர்ந்து சந்திப்பதை நான் தவிர்ப்பது எனக்கு நன்று ஏனெனில் சிலசமயம் என்மனம் அவர்பால் சென்று என்மகனின் வாழ்வு பாதித்துவிடுமோ என்ற பயம்தான் முக்கிய காரணம்..அதனால் கூடிய விரைவில் அந்த இடத்தை மாற்ற முடிவுசெய்துவிட்டேன்.
எனது முடிவின்படி அந்த ஊரை மாற்றி வேறு ஊருக்கு பெயர்ந்து வந்து விட்டேன்.

# பிரியாத உறவுகள்.

www.tamilarangam.net

**எனது 41வது வயதில் (உனது வயது 20)**
நீ பல்கலைக்கழகம் புகுந்துவிட்டாய்.நீ படித்து பட்டம்பெற்று
சிறந்த ஒரு வக்கீல் ஆகவேண்டும் என்பதே என் அவா. அதனால் உன்னை
தொடர்ந்து படிக்க வைத்தேன். என்னிடம் உன் வாழ்வுக்குத் தேவையான
பணத்தை சேர்த்துக்கொண்டேன். இடம் மாறி வந்தபோதே எனது தொழிலுக்கு
முற்றுப்புள்ளி இட்டுவிட்டேன்.
நீ ஒரு நேர்மை தவறாத சட்டத்தரணியாக,பெண்குலத்திற்காய்
வாதாடும் ஒருவனாக,நல்லவனாக வாழ வேண்டும் என்பதே என் எண்ணம்.
தொடர்ந்து நீ முன்னேறி நீதி தவறாத நீதிபதியாக வரவேண்டும்
என்பதுதான் என் முழு இலட்சியம்.இந்த இலட்சியப் பாதையில்தான்
உன்னை வழிநடத்திச்சென்றேன்.
சட்டப்படிப்பு முடிந்து ஒரு வக்கிலாகபட்டம் பெற்று வெளியுலகப்பார்வைக்கு
நீ அறிமுகமாகி உன் தாய் மனம் குளிர வைத்தாய்.இதுவும்தான் என்
வாழ்க்கையில் மறக்க முடியாத நாட்களில் இன்னொன்று.
அடுத்த சில வருடங்களில் வனஜாவை -என் மருமகளை- இவள்தான் என்
வாழ்க்கைத்துணைவி என அறிமுகப்படுத்தினாய்.அவளை என் வீட்டிற்கு
புகுமுகமாக அன்போடு வரவேற்றேன்.

**எனது 51வது வயதில்(உனது வயது 30)**
உனது வாதத்தைப்பார்க்க நான் ஆவல் கொண்டு நான் கேட்டதற்கு இணங்க
ஒரு வழக்கைப் பார்க்க நீதி மன்றத்துக்கு ஒரு நாள் அழைத்துச்சென்றாய்.
அங்கே வரதாராஜனும் வந்திருந்தார்.
அவர் கண்களில் நான் படக்கூடாது என்ற காரணத்தால் ஏதோ உன்னிடம்
சாக்கு சொல்லி மறைந்து நின்றுவிட்டேன்.வழக்கின் வாதம் நடந்தது.

வரதாராஜன் வேறு ஊரவர்.
இந்த வழக்கு பார்க்கவும் பிரகாஷ் என்ற இளைய வக்கீலின் பெயர்
நன்றாக அடிபடுகிறது எனக்கேள்வியுற்று தான் இந்த கோட்டுக்கு வந்ததாக
நான் அறியக்கூடியதாக இருந்தது.
உனது வாதத்தை அவர் கண்டார்.
அதைவிட எனது சாயலை உன்னிடத்தில் கண்டு அவர் உள்ளத்தைத்
தொட்டதோ அன்றேல் உனது செய்கைகளில் வாதத்தில் தன்னை உன்னிடம்
கண்டாரோ தெரியவில்லை.
வழக்கு முடிந்து நான் உன்னைத்தேட உனது அறைக்குள் வந்தபோது அவர்
உன்னுடன் உரையாடுவது எனக்குக் கேட்கிறது.
உன் பெற்றோரைப்பற்றி அவர் கேட்டதும் அவர்கள் இறந்துவிட்டதாக
நீ பதில் சொன்னதையும் நான் கேட்டேன்.
உன் வளர்ப்பு தாய்பற்றியும் நீ எதுவும் கூறவில்லை. அவர் கேட்ட
கேள்விக்கு மட்டும் பதில் தந்தாய்.
ஆனால் அவர் வெளியே தெருவுக்கு வரும்போது நானும் நீயும் வேறு வழியாய்
வந்து காரில் ஏறுவதை அவர் கவனித்துவிட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓடிவந்தார் ''சத்தியா'' என்றபடி.
நீ அதைக்கவனிக்கவில்லை.
அவர் பக்கத்தில் நின்ற பெண் அவரைப்பிடித்து இழுத்து ஏதோ வசை பாடுவது என் காதில் விழுகிறது.
அவள்தான் அவரது இல்லத்தரசியாக இருக்கவேண்டும் என்று புரிந்துகொண்டேன்..அவரது குடும்ப வாழ்வில் இந்த மகாலட்சுமியுடன் அவர் எவ்வளவு கஸ்டப்பட்டிருப்பார் என்பது எனக்குப் பலனாகியது.
அவ்விடத்திலும் அவர் அமைதி இழந்து தவிப்பது தெரிந்தது.
வாழ்க்கையில் உண்மையானதை அவர் இழந்துவிட்டார்.
அந்த சந்தர்ப்பத்தில் அவர் உன்னை அடையாளம் கண்டுகொண்டார்.
நீதான் தன் மகன் என்று அன்று அவருக்கு நிரூபணமாகிவிட்டாய் என்பதும் எனக்கு விளங்கியது.(எம்மைத்தேட அவர் எவ்வளவு கஸ்டப்பட்டிருப்பாரோ அது இறைவனுக்கே வெளிச்சம்.)
இந்த நேரத்தில் நீயோ என்னுடன் வழக்குப்பற்றிப் பேசியபடி அமைதியாகக் காரை ஓட்டுகிறாய்.நானும் அமைதியிழக்கத் தவறவில்லை.
அன்றைய அந்த சந்தர்ப்பத்திற்குப் பிறகுதான் நன்றாக யோசித்துவிட்டு எனது இந்த 51 வயதில் இந்தக்குறிப்பேடு வரைகின்றேன்.
இதன்படி உனது தந்தயை உனக்கு நான் அடையாளம் காட்டிவிட்டேன்.
ஆனால் நீ அவருடன் இணைந்து வாழ முடியாது.
உன் தாயின் வாழ்வு அம்பலமாகி உன் வாழ்வும் அதனால் பாதிப்பு அடைந்து விடும்.
அதைவிட அவரில் உனக்கு வெறுப்புணர்வும் வரலாம்.எதற்கும் சிந்தித்து செயலாற்று.நீதான் அவர் மகன் என்பதை நீ சொல்லத்தேவையில்லை. (அவருக்குத்தெரிந்துவிட்டது.)
வாழ்க்கையின் அலைகளால் அலைக்களிக்கப்பட்டவள் நான்..அடிபட்டு நொந்தேன்.எக்காரணம் கொண்டும் கொந்தளிக்கவில்லை.எதிர் நீச்சல் அடித்துத்தான் உன்னை ஒரு சமுதாயத்தில் பலர் மதிக்கும் மனிதனாக்கிப் பார்த்தேன்.
இதைப்படித்து நீ கடல்போல் கொந்தளிப்பாய். எதையும் பூமி போல் பொறுத்திரு என்மகனே!

நான் ஒரு தனிமரமாக வாழ்ந்தேன்.உன்மூலம் ஒரு கூடுகட்டிவிட்டேன். உனக்கு ஒரு குடும்பம்,சந்ததி வேண்டும் என்பதே என் ஆசை.என்மூலம் வரதராஜன் சந்ததி வாழ்கிறது.
இதைப்படித்து சிலசமயம் விபச்சாரத்துக்கு விளக்கம் தேவையா'?என நீ நினைக்கக்கூடும்.என்னில் வெறுப்பும் கொள்ளக்கூடும்..அந்த நேரம் நான் உன்னோடு இருக்கமாட்டேன்.உறவுகளை யாராலும் பிரிக்க முடியாது.இது பிரியாத உறவுகள்.
என்றும் உன் எதிர்கால நலன் நாடும்-
உன் அன்பின் தாய்-
சத்தியபாமா.
பிற்குறிப்பு: இந்தக்குறிப்பு என்மகனுக்கு மட்டுமே எழுதப்பட்டவை.

www.tamilarangam.net

பிரகாஷின் கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தோடியது.அம்மா எனக்கு சாகும்போது சொன்ன வாழ்க்கைக்குத் தேவையான பாக்கிக் கணக்குகள் இவைதான் எனப்புரிந்துவிட்டது. அம்மா இறந்து மூன்று வருடங்கள் முடிந்துவிட்டது..அவளின் முகத்தில் நான் அறிய ஒருநாளும் சோகத்தைக் காணவில்லை..அமைதியுடன் புன்னகைத்த முகம். சீறமாட்டாள். சினம் கொள்ளமாட்டாள்.தன் துன்பத்தை என்னிடம் மறைத்து வாழ்ந்த உத்தமத்தாய் அவள்.
அம்மாவை நினைக்கப் பரிதாபமாக இருந்தது.சில நிமிடங்களின்பின் மனதை நிலைப்படுத்தி அமைதியானான் அவன்.
புதன்கிழமை நடைபெறப்போகும் வழக்கில் பிரகாஷ் தந்தையை எதிர்த்து வாதாடபோகிறான்.வரதாஜன் எதிராளிக்காக ஆஜராகிறார். பிரகாஷ் இந்தவழக்கில் வாதாடப்போவது அவருக்குத்தெரியாது. பெண்கள் சம்பந்தமான வழக்குகளில் பிரகாஷ் வெற்றி பெறுவது அனைவர்க்குமே தெரிந்திருந்தது.வாதராஜனோ நீதியை மறுபக்கமாகப் பாட்டி எடுப்பவர்..அவர் வாழ்க்கையின் பாடம் அதுதான் என்பது இப்போதுதான் இவனுக்குப்புலனாகிறது.
எனது வழக்குக்குத்தேவையான குறிப்புகளை என் அம்மாவின் குறிப்புகள் தந்துவிட்டன.சட்டப்புத்தகங்கள் எனக்குத் தேவைப்படவில்லை..என்று நினைத்துக்கொண்டவனாய் எழுந்து அந்தக்குறிப்பேட்டை அலுமாரியில் வைக்கவும் காலை 7மணி அடிக்கவும் சரியாக இருந்தது.

''பிரகாஷ்...மணி 7ஆகிவிட்டது. இன்னும் முடியவில்லையா உங்கள் வேலை: நெடுக இதுக்குள் இருக்கவேண்டாம்...பிள்ளைகள் எழுந்து அப்பாவைக் காணவில்லை ..என்று தேடுகிறார்கள்.''என்றபடி வந்தாள் வனஜா. அவனது பிள்ளைகள் சத்தியராஜும் தனுஜாவும் பின்னால் வந்தார்கள்.
''அப்பா இன்றைக்கு சனிக்கிழமை ..நாங்கள் எங்கேயாவது போவோமா..?''
''அப்பாவுக்கு இந்த வாரம் நிறைய வேலை இருக்கிறது... அவருக்குக் கரைச்சல் கொடுக்கக்கூடாது:''என்று வனஜா கண்டிப்பாகவும் அன்பாகவும் குழந்தைகளிடம் கூறுகின்றாள்.
''இல்லை வனஜா இன்றைக்கு மிருகக்காட்சிச்சாலைக்குப் போகலாம் ''என்றான்
''என்ன பிரகாஷ்,இரவு நித்திரை விழித்து கண்ணெல்லாம் சிவந்துவிட்டது.. வேண்டாம் அடுத்த வாரம் போகலாம்தானே''
''இல்லை நீ வெளிக்கிடு!''
உண்மையில் பிரகாஷ் களைத்த நிலையில்தான் இருந்தான்.
ஆனாலும் அம்மாவை நினைத்தபோது .....அவள் அனுபவித்த நித்திரைவிழிப்பு உபத்திரவங்களைவிட இது பெரிய விழிப்பா என்றுதான் அவனுக்குத்தோன்றிற்று.
எனது குடும்பம் ஒற்றுமையுடன் பாசத்துடன் பிணைந்து வாழவேண்டும் என்று அம்மா தன் கடைசிக்குறிப்பில் எழுதியதை எப்படி அவன் வனஜாவிடம் கூறமுடியும்:?
எனது தாயின் ஆசையை நிறைவேற்றுவது தனயன் எனது கடமையல்லவா என எண்ணியபடி குளித்து சாப்பாடுமுடித்து வெளியில்போகத் தயாராகிவிட்டார்கள் இந்தத் தேன்கூட்டு உரிமையாளர்கள்.

www.tamilarangam.net

வருங்காலத்தில் அவனது தாயின் ஆசையின்படி அவன் நீதிதவறாத நீதிபதியாக வருவது நிச்சயம்தானா?
அமைதிதாயின் வழி வளர்க்கப்பட்டவன் தற்பொழுது அமைதியுடன் வாழ்பவன் தொடர்ந்து அமைதி வழி நடப்பானா?
தனது தந்தையை தன்னுடன் இணைத்து வாழ்வானா?
பிரகாஷ் அமைதியானவன்.ஆனால்,அவன் சொந்தமாகஎடுத்த முடிவு யாருக்குத்தெரியும்?

(முற்றும்)

## பிறேமனில் தமிழர் கலாச்சார தின விழா!

ஒானேவர்-கலாச்சார நிலையத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்டுவரும் சர்வ தேசியக்கலை நிகழ்ச்சிகளில், சென்ற ஆண்டுபோல் இவ்வருடமும் தமிழர் கலாச்சார தினம் இடம்பெற்றது.
26.10.1991 சனிக்கிழமை மாலை நிகழ்ந்த இவ்விழாவில்,இசை-நடன,நாடக நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.
சித்ரா மணிவண்ணன் எழுதித்தயாரித்த''இன்றைய எங்கள் வாழ்க்கை'' (Unsere leben heute)குறு நாடகம் ஜெர்மன் மொழியிலான அறிமுகத்துடன்,யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்க்குடும்பத்தின் இன்றைய துயரநிலையைப் படம்பிடித்துக்காட்டிற்று.
அன்ரன் பீலிக்ஸ்,பத்மினி பாம்,அனுஷா செல்வலிங்கம்,திருநாவுக்கரசு, ரமேஷ்,ஸ்ரீதரன்,கருணாகரன்,கனிமுத்து ஆகிய கலைஞர்கள் பங்குகொண்டனர்.அனைத்துக்கலைஞர்களும் தங்கள் திறமையைக் காட்டியிருந்தார்கள். எனினும், தாயின் பாத்திரத்தை ஏற்றிருந்த பத்மினி பாம் ஒரு நடுத்தரக்குடும்பத்து,யாழ்ப்பாணத்துத் தாயைத் தன் நடிப்பின் மூலம் அப்படியே பிரதிபலித்துக்காட்டி இரசிகர்களைக்கவர்ந்துகொண்டார்.
நடன ஆசிரியை ஸ்ரீரஞ்சனி குணரத்தினத்தின் ''கலாப் பிரியா'' நடன மாணவிகள்: கஜாளினி ஞானப்பிரகாசம்,ஜசிகா பஸ்தியாம்பிள்ளை, தினுஷா ராஜதுரை ஆகியோர் நடன விருந்தளித்தனர்.
மொஞ்சன்கிளட்பாக்-தமிழீழ வளர்பிறை இசைக்குழுவினரின் பின்னணி இசையுடன் வசந்தா புவனேந்திரன்,சித்ரா மணிவண்ணன், அன்ரன் பீலிக்ஸ்,பிரான்ஸிஸ்,ஜேசுதாசன் ஆகியோர் இன்னிசை கீதங்களை இசைத்தனர்.
இக்கலாச்சார நிகழ்ச்சியில் பார்வையாளர்களாக அதிக அளவில் ஜெர்மானிய இரசிகர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை இறுதிவரை இரசித்தனர்.
பிறேமன தமிழ் மங்கையர் அணியினரால் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிவகைகள் பார்வையாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.
''இவ்விழா அனைவரையும் கவர்ந்திருந்தது!'' என்கிறார்,கலாச்சார நிலையத்தைச்சேர்ந்த வில்ஃறூட் கடெல்கா.

(தகவல்—ஞானி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்ன நடக்கிறது?

## பிறேமன் மாநில தேர்தல்.

செப்டம்பர் மாதம் 29ம் திகதி பிறேமன் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலில் வலது சாரிக்கட்சிகள் தங்கள் வாக்குவீதங்களை அதிகரித்துக் கொண்டுள்ளன.
கடந்த 40 ஆண்டுகளில் இடம் பெற்ற தேர்தல்களில் SPD கட்சிக்கு இத்தேர்தல் முடிவுகள் ஒரு தோல்வியே.
ஜேர்மனி ஜேர்மனியருக்கே எனவும் வெளி நாட்டவர்களுக்கு எதிராகவும் பிரச்சாரம் செய்த DVU கட்சி 1987ம் ஆண்டு தேர்தலில் பெற்ற 3.4 வித வாக்குகளை இம்முறை 6.2 வீதமாக அதிகரித்துக் கொண்டுள்ளதோடு பாராளுமன்றத்தில் 6இடங்களையும் பெற்றுள்ளது.
வெளி நாட்டவர்களுக்கெதிரான தாக்குதல்கள் அதிகமாக இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் இடம்பெற்ற இத்தேர்தலின் முடிவுகள் தீவிரவாதிகளுக்கு உற்சாகமூட்டுவதாகவே இருந்தன.
ஜேர்மனியின் மாநிலங்களில் மிகவும் சிறியதான பிறேமன் பாராளுமன்றத்தில் உள்ள 100 இடங்களுக்கான முடிவுகள் பின்வருமாறு:
(1987ம் ஆண்டு இடம் பெற்ற தேர்தல் முடிவுகள் அடைப்புக் குறிக்குள்.)

| கட்சிகள்: | வாக்குவீதம்: | பெற்ற இடங்கள்: |
|---|---|---|
| SPD | 38.8 (50.5) | 41 (54) |
| CDU | 30.7 (23.4) | 32 (25) |
| FDP | 9.5 (10.0) | 10 (10) |
| GREENS | 11.4 (10.2) | 11 (10) |
| DVU | 6.2 (3.4) | 6 (1) |
| ஏனையவை | 3.4 (2.5) | - - |

DVU கட்சி 6இடங்களையே கைப்பற்றியபோதும் ஏனைய பிரதான அரசியல் கட்சித் தலைவர்களை இது கவலைகொள்ளச் செய்துள்ளது.

* மத்திய கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் முகமாக ஸ்பெயின் நாட்டின் தலை நகரான மட் ரிட்டில் மகாநாடு ஒன்று சென்ற மாதம் 30ம் திகதி ஆரம்பமானது.இஸ்ரேல் 13 ஆண்டுகளின் பின் பாலஸ்தீனத்தவர்களுடன் நெருக்கு நேர் முகன் முறையாக சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடாத்திவருகிறது.மேற்படி மகாநாட்டின் ஆரம்ப நாளன்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.பின்னர் இஸ்ரேல் அரபு நாடுகளின் தூதுகுழுக்களுடன் தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியது.
(மேற்படி மகாநாடு சம்பந்தமான விபரமான செய்தித் தொகுப்பு அடுத்த இதழில் இடம்பெறும்.)

www.tamilarangam.net

* ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியை அகற்றுமுகமாக எதிர்க்கட்சிகளாலும் அதிருப்தியாளர்களாலும் சபா நாயகரிடம் கொடுக்கப்பட்ட மனு ஒரு பரபரப்பை ஏற்படுத்தியபோதும் ஜனாதிபதி பிரேமதாசாவை அகற்றும் முயற்சி தோல்வியடைந்துள்ளதாகவே தோன்றுகிறது.
ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி சபா நாயகரிடம் கையளிக்கப்பட்ட மனுவில் 120 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள இது போதுமான தொகையாகும். இதையடுத்து ஏற்பட்ட நிலைமையை சமாளிக்கு முகமாக ஜனாதிபதி பாராளுமன்றத்தை செப்டம்பர் மாதம் 24ம் திகதிவரை பின்போட்டார்.செப்டம்பர் 3ம் திகதி 125 ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களில் 118 பேர் கையெழுத்திட்டு மேற்படி மனுவை நிராகரிக்குமாறு கோரி பிறிதொரு மனுக்கொடுத்தார்.சில உறுப்பினர்களின் பெயர்கள் இரு மனுக்களிலும் இருந்ததையடுத்து இதுபற்றி ஆராய அவகாசம் வேண்டுமென்று சபா நாயகர் தெரிவித்தார்.
சில வாரங்களின் பின் பாராளுமன்றம் கூடியபோது.பிரேமதாசாவை அகற்றக்கோரும் மனுவில் உள்ள கையெழுத்துக்கள் போலியானவை எனத் தெரிவித்த சபானாயகர் இதன் காரணமாக இம்மனு ஏற்றுகொள்ளப்பட முடியாதது என அக்டோபர் மாதம் 7ம் திகதி தெரிவித்தார்.
அதிருப்தியாளர்களின் முக்கிய இரு தலைவர்களான லலித் அத்துலத் முதலியும்.காமினி திச நாயகாவும் ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் என்பதோடு முன்னாள் அமைச்சர்களுமாவர்.

* சீனா சர்வதேசநாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி தொடர்ந்தும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அணுக்குண்டு தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை வழங்கிவருகிறது.குறிப்பாக ஈரான் தற்போது அணுக்குண்டு தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்கள் அனைத்தையும் பெற்றுவிட்டதாகவும் ஒருசெய்தி தெரிவிக்கிறது.

* சென்ற மாதம் 31ம் திகதி சம்பியாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 27 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி புரிந்த ஜனாதிபதி கெனத் கவுண்டா தோல்வியடைந்தார்.திரு.சிலுபா புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

---

பூவரசு அடுத்த இதழ்-
ஜனவரி 15ம் திகதி வெளிவருகிறது!
பூவரசு தனி இதழ்: 4DM
ஆண்டுச்சந்தா:30DM (தபால் செலவுடன்).

www.tamilarangam.net

# நடுநிலை தவறாதீர்!

ஜேர்மானிய மாநிலங்களிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு இடையிலான உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி நாணல் விளையாட்டுக் கழகத்தால் 21.9.91 சனிக்கிழமை நடைபெற்றது.
கலந்துகொண்ட உதை பந்தாட்ட வீரர்கள் அனைவரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர் என்பது உண்மையே.எனினும் இறுதித்தீர்ப்பை எல்லோராலும் ஒத்துக்கொள்ள இயலவில்லை என்பது வேதனைக்குரியது.

'இறுதி ஆட்டத்துக்குத் தெரிவு செய்து மோதும் போது சமநிலை ஏற்படுமாயின் மேலதிக 20 நிமிடம் வழங்கப்படும் என்பதும்,மீண்டும் சம நிலை ஏற்பட்டால் பெனால்டி வழங்கப்படும் என்பதும் இறுதி ஆட்டத்துக்கு 3அணிகள் வரும் பட்சத்தில் இவர்கள் A+B+C என்னும் பெயர் கொடுக்கப்பட்டு, 3 அணித்தலைவர்களும் அழைக்கப்பட்டுவிளையாடும் முறை எடுத்துச்சொல்லப்படும்' என்பதும் போட்டிவிதிகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.ஆயினும் இறுதித்தீர்ப்பில் இந்த விதிகள் மீறப்பட்டுள்ளன.

இறுதி ஆட்டத்திற்கென பிறேமன்,பீலவில்ட்,பெர்லின் அணிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.இந்நிலையில் மறுபடியும் கம்பேர்க் அணியுடன் மோதும்படி பிறேமன் கேட்டுக்கொள்ளப்பட்டது ஏன் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.
ஆயினும்,பிறேமன் அணியுடன் மோதுவதற்கு கம்பேர்க் அணி மறுத்து விட்டதோடு, 11மீற்றருக்கு மட்டும் அது ஒப்புக்கொண்டது.
காரணம் புரியாத நிலையிலும் கம்பேர்க் அணியுடன் மோதுவதற்கு பிறேமன் அணி தயாராகவே இருந்தது.ஆகவே பெனால்டிக்கு அது மறுத்தது.போட்டிவிதிகள் மீறப்படுவதை பிறேமன் அணி நடுவர்களுக்குச் சுட்டிக்காட்டியது.எனினும்,பிறேமன் அணியினரின் கருத்துக்கள் நடுவர்களால் நிராகரிக்கப்பட்டதோடு,நியாய பூர்வமாக பிறேமனுக்குக் கிடைக்க இருந்த 3வது பரிசு கம்பேர்க் அணிக்குக் கொடுக்கப்பட்டது.
அனைத்துத் தமிழ் அணியினருக்குமான இப்போட்டிகளில் நடுவர்களால் குறிப்பிடப்பட்டிருந்த விதிகள் அவர்களாலேயே தளர்க்கப்பட்டது அல்லது நிராகரிக்கப்பட்டது உதை பந்தாட்டவிதிகளை உணர்ந்த எந்த ஒரு விளையாட்டு வீரர்களாலும் ஒப்புக்கொள்ளப்படத் தக்கது அல்லவே.
உதை பந்தாட்ட அணியினரை ஊக்குவிக்கும நாணல் விளையாட்டுக் கழகத்தினரின் அயரா முயற்சிகளை நாங்கள் வரவேற்கும் அதே வேளை நடுவர்களின் நடுநிலையற்ற தன்மைகள் மூலம் உதைபந்தாட்ட அணியினருக்கிடையே ஒற்றுமையின்மையும், அதிருப்தியும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே எங்கள் கருத்தாகும்.

அன்ரான் பீலிக்ஸ்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாராட்டுகிறோம்.

பீலவீல்ட் தமிழர் விளையாட்டுக் கழகத்தினரால்
ஒழுங்கு செய்யப்பட்டிருந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில்,
ஜெர்மனியின் 16இடங்களைச்சேர்ந்த உதைபந்தாட்ட அணியினர் பங்கு
கொண்டனர்.
போட்டி விதிகளை அனுசரித்து அனைத்து அணியினரும் சிறப்பாக
ஆடினர்.இறுதியாட்டத்தில் பெர்லின்-பீலவீல்ட் அணிகள் சமமாக
வெற்றியீட்டின.நடுவர்களின் தீர்ப்பின்படி,இரண்டு அணிகளும்
பெனால்டியில் கலந்துகொண்டதில் பீலவீல்ட் அணி வெற்றி பெற்று
முதலாவது இடத்தைக் கைப்பற்றியது.
போட்டியில் பங்குகொண்ட அனைத்து அணியினருக்கும் கிண்ணங்கள்
பரிசளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.
இவ் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை திறம்பட நடாத்திய
பீலவீல்ட் தமிழர் விளையாட்டுக்கழகத்தினரை பிறேமன்
உதைபந்தாட்டக் கழகத்தின் சார்பில் பாராட்டுகிறோம்.

— அன்ரன் பீலிக்ஸ்.

# விளையாட்டுச் செய்திகள்

## மாவட்டச்சாம்பியன்.

Rotenburg- மாவட்டச்சாம்பியன் போட்டியில்
Diskuswurf,Speerwurf ஆகிய
இரு விளையாட்டுக்களிலும் கலந்துகொண்டு
முதலாம் இடங்களைப்பெற்றிருக்கிறார்
செல்வன்: **நிமலன் வரதராஜா.**
13வயது மாணவரான **நிமலனின்** சாதனைகளைப்
பாராட்டும் **பூவரசு**
எதிர்காலத்தில் **நிமலன்** மேன்மேலும்
பலசாதனைகளைப்புரிந்து
தமிழுக்குப் பெருமை சேர்க்கவேண்டுமென்று
வாழ்த்துகிறது.



www.tamilarangam.net

பூவரசு ஓராண்டு நிறைவுக் கலை,இலக்கிய விழா
1992 தை மாதம் நடைபெறவுள்ளது என்பதை வாசகர்களுக்கு
அறியத்தருகிறோம்.நேரடியாகக் கலந்துகொள்ள இயலாத
அயல் மாநில படைப்பாளர்களும் வாசகர்களும்,
கவியரங்கு,கருத்தரங்குகளில் எழுத்துமூலம் கலந்துகொள்ளலாம்.
விபரங்களுக்கு,பூவரசு முகவரிக்கு உடன் எழுதுங்கள்.
விழா நடைபெறும் இடம்,நாள்,நேரம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

---

*சமைத்துப்பார்க்கலாம்.*

ஸ்ரோலன்(கிறிஸ்மஸ் கேக்)

தேவையான பொருட்களும் செய்முறையும்:

500 கிராம் மா

1 பைக்கெற் பேக்கிங் பவுடர் (இரண்டையும் கையால் பிசைந்து கலக்கவும்.
175 கிராம் சீனி
1 பைக்கெற் வனிலா சீனி
கத்திக்கூர் அளவு உப்பு
4 துளிகள் வாதாம்பருப்பு சென்ஸ் (backol bitter mandel)
4 துளிகள் எலுமிச்சை சென்ஸ் (backol zitrone)
1 சிறிய போத்தல் றம் (Rum aroma)
1/2 தேக்கரண்டி ஏலக்காய் தூள்
1/2 தேக்கரண்டி ஜாதிக்காய்த்தூள்
2 முட்டை (இவற்றுடன் கலந்த மாவைச்சேர்த்துக்குழைக்கவும்.)
125 கிராம் பட்டர் அல்லது மாஜரின்
250 கிராம் குவாக் (speisequark)
125 கிராம் சிறிய முந்திரிய வற்றல்
125-250 கிராம் முந்திரிய வற்றல் (இரண்டையும் கழுவி வடியவைத்து
சிறிது மாவில் புரட்டி வைக்கவும்.)
125-150 கிராம் வாதாம் பருப்பு அரைத்தது (gemahlen mandeln)
50 கிராம் சித்றொனற் (zitronat sukkade)
பழங்களைக் குழைத்தமாவில் கலந்து குழைக்கவும்.கலவை
கையில் ஒட்டுமானால் சிறிது மா சேர்க்கவும்.
இக்கலவையை பாண் உருவத்தில் செய்து,வெள்ளிப் பேப்பரால் சுற்றி
தட்டில்வைத்து சூடாக்கப்பட்ட அவணில் 160-180ல் 50-60 நிமிடம்
வேகவைக்கவும்.
அவித்த கேக்கை உடனடியாக எடுத்து 100கிராம் பட்டர் பூசி
50 கிராம் பவுடர் சீனி தூவி வைக்கவும்.
(பின் குறிப்பு:இக்கேக்கை நன்கு ஆறியபின் கண்ணாடி பேப்பரால்
சுற்றிவைத்தால் பல நாட்கள் கெடாமல் இருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூவரசு

இனிய தமிழ் ஏடு-
அடுத்த இதழ் ஆண்டு மலர்

இந்துமகேஷ் எழுதும்
அனுபவத் தொடர்...''என் வாசகர்களைத்தேடி....!''

**அவள்** ---(நெடுங்கதை)

''கவிதாயினி'' ஜெகதீஸ்வரி ராஜரட்ணம் எழுதும்,
''என் வாழ்க்கை ஒரு கவிதை.'' (படைப்பாளர் அறிமுகம்)

வீ.ஆர்.வரதராஜா எழுதும்
இலக்கிய இன்பம்.

இவற்றுடன் சிறுகதைகள்,கவிதைகள், கட்டுரைகள்
மற்றும் வழக்கமான அம்சங்களுடன்....
புத்தாண்டில்
உங்கள் பூவரசு
சிறப்பு மலராக வெளிவருகிறது!

ஆண்டுமலருக்கென மேலும் ஆக்கங்களை அனுப்பவிரும்புவோர்
நவம்பர் 30ம் திகதிக்குள் தங்கள் ஆக்கங்களை
அனுப்பிவையுங்கள்.

---

பசடைப்பாளிகள் கவனத்திற்கு....

பூவரசுக்கென நீங்கள் ஆக்கங்களை அனுப்பும்போது
உங்கள் முழுப்பெயர்,முகவரி இவைகளைக் குறிப்பிட்டு
அனுப்புங்கள் பூவரசுக்கென அனுப்பும் ஆக்கங்களைப்
பிரதி செய்து வேறு பத்திரிகைகளுக்கு அனுப்புவதைத்
தவிருங்கள்.உங்கள் ஆக்கங்கள் பூவரசில் இடம்பெறாவிட்டால்
அவைகள் உங்களுக்குத்திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

---

www.tamilarangam.net

# பிறேமன் பொதுநூல் நிலையத் தமிழ்ப் பிரிவு!

பலவருடங்களுக்கு முன்பு நிறுவப்பட்டு பிறேமனில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் அரும் பணியாற்றி வருகிறது-பொது நூலகம். ஜேர்மானியமொழியிலான நூல்களுடன், ஆங்கிலம்,பிறெஞ்ச்,துருக்கியமொழி உட்பட 25க்கும் மேற்பட்ட மொழிகளில் பெருந்தொகையான நூல்களைக்கொண்டு,நகரின் பல்வேறு பகுதிகளிலும் 30க்கு மேற்பட்ட நூலகங்கள் பணியாற்றி வருகின்றன. இங்குள்ள தமிழ் வாசகர்களின் விருப்பத்திற்கிணங்க இப்போது,இந்நூலகத்தில் தமிழ் நூல்களும் சேகரிக்கப்படுகின்றன.
தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களின் நவீனங்கள்,குறு நவீனங்கள்,சிறுகதை,கவிதை, கட்டுரைத்தொகுப்புக்கள்,அரசியல்,சமூக,சமய நூல்கள்,இவற்றுடன் சிறுவர்களுக்கான நூல்கள், ஈழத்தவர் ஆக்கங்கள் என்பனவும் தருவிக்கப் படுகின்றன.
விரைவில் நூல்கள்பற்றிய விபரப்பட்டியல் உங்களுக்கு அறியத்தரப்படும்.

முதலில் Osterholz,Walliser str.பொது நூலகத்தில் இயங்கவுள்ள தமிழ்ப்பிரிவு,உங்கள் ஆர்வத்தைப்பொறுத்து நகரின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

ஏனைய விபரங்களுக்கு:
Kultur Büro,
(Tamilische Sektion)
Neuwieder Str.22
2800 Bremen.41
என்னும் முகவரிக்கு எழுதுங்கள்.

Stadt-
Bibliothek
Bremen